விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26

ஒலி 082 வள்ளுவர் ஆண்டு 2056 மாசி 27 செவ்வாய்க்கிழமை (11.03.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சாவதேச இலவச திருமண சேவை



T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamaiai.jaffna@gmail.com
4000/=

## அத்துமீறிய யூரியூப்பருக்கு 14 நாட்கள் விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பில் பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றின் வீட்டினுள் இரவு வேளை நுழைந்து, அநாகரிகமாக நடந்து கொண்ட குற்றத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த யூரியூப்பர் உள்ளிட்ட நால்வரையும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த யூரியூப்பர் வறிய

15ஆம் பக்கம் பார்க்க

ஒழுக்கமான நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு

## மகாசங்கத்தினர் தலைமையிலான மதஸ்தலங்களுக்குப் பொறுப்புள்ளது

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

(கொழும்பு)

ஒழுக்கமான நாட்டைக் கட்டியயெழுப்புவதற்கு மகா சங்கத்தினர் தலைமையிலான மதஸ்தலங்களுக்குப் பொறுப்புள்ளது என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கரகொட உயங்கொட மைத்ரிமூர்த்தி தேரருக்கு சன்னஸ் பத்திரத்தை வழங்கும் அரச விழா நேற்றுப் பிற்பகல் கொழும்பிலுள்ள

16ஆம் பக்கம் பார்க்க

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில்

# விசாரணை நடத்தப்பட்டு நீதி பெற்றுக் கொடுக்கப்படும்

## வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்



(கொழும்பு)

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு நீதி பெற்றுக் கொடுக்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## தம்புள்ளையில் வீதி விபத்து; இருவர் பலி

(தம்புள்ளை)

தம்புள்ளை பகமூன வீதியில் நேற்று நடைபெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

வீதியால் சென்ற ஜீப் ரக

15ஆம் பக்கம் பார்க்க

மேன்முறையீட்டு நீதியரசராக

## பிரேமசங்கர் இன்று பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிய

16ஆம் பக்கம் பார்க்க

## புதிய கல்விச் சீர்திருத்தங்கள் 2026ஆம் ஆண்டில் தொடங்கப்படும்

### பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



(கொழும்பு)

புதிய கல்விச் சீர்திருத்தங்கள் 2026ஆம் ஆண்டில் தொடங்கப்படும் என்றும், அதற்கான தயாரிப்பு செயன்முறை 2025ஆம் ஆண்டில் நடைபெறும் என்றும் பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி தொடர்பான அமைச்சர்கள் ஆலோசனைக்

16ஆம் பக்கம் பார்க்க

பணம் பெற்ற

## பொலிஸ் அதிகாரியின் மகனை கைது செய்ய உத்தரவு

(யாழ்ப்பாணம்)

வழக்குகளிலிருந்து விடுவிக்கப் பணம் பெற்று வந்த பொலிஸ் உயர் அதிகாரியின் மகனை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு யாழ். நீதவான் நீதிமன்றம் பொலிஸாருக்குக் கட்டளையிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வேலை செய்த பொலிஸ் அதிகாரியின் மகன் ஒருவர் பொலிஸ் நிலையங்களுடன் வழக்கு

15ஆம் பக்கம் பார்க்க

## சுழிபுரத்தில் மாடுகளை கடத்தியவர் கைது

(யாழ்ப்பாணம்)

சுழிபுரத்தில் அனுமதிப் பத்திரமின்றி மாடுகளைக் கடத்திச் சென்ற சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குறித்த சந்தேகநபர் சுழிபுரத்

15ஆம் பக்கம் பார்க்க

மார்ச் 24 – 27 ஆம் திகதி வரை

## மன்னார், பூநகரி சபைகளுக்கு வேட்புமனுக்கள் ஏற்பு

(கொழும்பு)

மார்ச் 24ஆம் திகதி முதல் மார்ச் 27ஆம் திகதி வரை மன்னார், பூநகரிப் பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்காக மன்னார், பூநகரி மற்றும் தெஹியத்த கண்டி பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்கள் மார்ச்

15ஆம் பக்கம் பார்க்க

## கனடாவில் தமிழ்ப் பெண் சுட்டுக் கொலை

### கோண்டாவிலைப் பூர்வீகமாகக் கொண்டவர்



(ஒட்டாவா)

கனடாவில், யாழ்ப்பாணம் கோண்டாவிலைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழ்ப் பெண் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

16ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



மலர்வு 31 - 05 - 1978

உதிர்வு 09 - 03 - 2025

## பாலகிருஷ்ணன் தணிகைவேள்

திக்கத்தைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டி வீதி வதிரியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலகிருஷ்ணன் தணிகைவேள் அவர்கள் (09.03.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலகிருஷ்ணன் - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (கராஜ் வைரமுத்து) - பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் ஜனாதனா அவர்களின் அன்புக் கணவரும் தேஸ்னா, ரோகித் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரில்குசா (லண்டன்), சந்திரலதா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரவிதாஸ் (லண்டன்), சிவகுமார் (லண்டன்), பாலாம்பிகை, யசோதாம்பிகை (ஜேர்மனி), சுபாம்பிகை, யோகாம்பிகை (டென்மார்க்), சிவராமன் (ஜேர்மனி), செந்தில்வேல் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும் முருகுப்பிள்ளை (கந்தசாமி), வேலும்மயிலும் ஆகியோரின் மருமகனும் ஸ்ரீன் (லண்டன்), ஷோபிதா (லண்டன்), அஸ்மிதா (லண்டன்), அர்ச்சனா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.03.2025) செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் உடுப்பிட்டி வீதி வதிரியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து நெல்லியடி மத்திய கல்லூரி மற்றும் திக்கம் சனசமூக நிலையத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனக் கிரியைக்காக பூதவுடல் திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

00447918397307
0094753333398 (C-2434)

தகவல்:
குடும்பத்தினர்

# கைது செய்வதை இடை நிறுத்துக தேசபந்து தென்னகோன் ரிட் மனு

(கொழும்பு)

கடந்த 2023 ஆம் ஆண்டு மாத்தறை வெலிகம ஹோட்டலில் நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பாக தன்னைக் கைது செய்ய மாத்தறை நீதவான் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை இடைநிறுத்த இடைக்காலத் தடை விதிக்கக் கோரி, முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தனது வழக்கறிஞர்கள் மூலம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுத் தாக்கல் செய்துள்ளார்.



இந்த மனு நேற்று (10) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவர் முகமது லாபர் தாஹிர் மற்றும் சரத் திசாநாயக்க ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன் பரிசீலனைக்கு அழைக்கப் பட்டது.

பிரதிவாதிகளுக்கு நோட்டீஸ் அனுப்பிய பின்னர், மனுவை 12 ஆம் திகதி பரிசீலனைக்கு அழைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதேவேளை மாத்தறை நீதிமன்றம் தேசபந்து தென்னகோனைக் கைது செய்ய பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில் அவர் தலைமறைவாகியுள்ளார். இன்றுவரை அவர் எங்குள்ளார் என்பது பற்றிய தகவல்கள் இல்லை. (ம-7)

### வடக்கின் முக்கோண வலயம் உட்பட

# நாடு முழுவதும் 25 இலட்சம் தென்னங்கன்றுகளை நாட்டத் திட்டம்


வடக்கின் முக்கோண வலயம் உட்பட இந்த வருடத்தில் 25 இலட்சம் தென்னங்கன்றுகளை நாடு முழுவதும் நடுவதற்குத் திட்டமிட்டுள்ளதாகத் தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் தலைவர் மருத்துவர் சுனிமல் ஜயகொடி தெரிவித்தார்.

அதில் வடக்கின் முக்கோண வலயத்தில் 10 இலட்சம் மற்றும் ஏனைய பிரதேசங்களில் 15 இலட்சம் தென்னங்கன்றுகளை நடுவதற்குத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

தேங்காய் விலை அதிகரித்தல், தென்னை உற்பத்திகளின் வீழ்ச்சி உட்பட தென்னைப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் தொடர்பாக நேற்று (10) அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கடந்த இரண்டு மூன்று வருடங்களைப் பார்க்கும் போது 2024 ஆம் ஆண்டில் தென்னை உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ம-7)

# மரண அறிவித்தல்



பிறப்பு 15 - 04 - 1954

இறப்பு 08 - 03 - 2025

## பெரியதம்பி பூபாலசிங்கம்

குடத்தனை மேற்கினைப் பிறப்பிடமாகவும் வலிக்கண்டி குடத்தனையினை வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி பூபாலசிங்கம் அவர்கள் கடந்த (08.03.2025) சனிக்கிழமை அன்று இயற்கை எய்தினார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி - பார்பதிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் கார்த்திகேசு (அமரர்) - அரியமலர் தம்பதியரின் பாசமிகு மருமகனும் கமலகுமாரி (ராணி) அவர்களின் அன்புக் கணவரும் சந்திரலிங்கம், காலஞ்சென்றவர்களான சறோஜாதேவி, செல்வேந்திரம் மற்றும் உதயகலா, சசிகலா, பாபு ஆகியோரின் பாசமிகு சகோதரனும் வாகீசம் (பிரான்ஸ்), சஞ்சீவன் (முன்னாள் தவிசாளர் - பருத்தித்துறை பிரதேச சபை, பகுதி வனவள உத்தியோகத்தர் - வனப்பரிபாலன திணைக்களம்), பூங்கோதை (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிவேதிதா (பிரான்ஸ்), சிந்துகா (படவரைஞர் - வீதி அபிவிருத்தி திணைக்களம்), ரிஷிகேசன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கணேசலிங்கம் (ஜேர்மனி), யோகலிங்கம், ஜெயலிங்கம் (பிரான்ஸ்), சோதிலிங்கம் (பிரான்ஸ்), சிவநேசன், சிவதாசன் (பிரான்ஸ்), பகீரதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் வர்சிகா, வம்சிகா, விகான், சகிந்தவி, அதிஸ்தவி, கனிஷ்தவி, பூங்கவின், பூங்கிரிசன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2025) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக குடத்தனை மேற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வலிக்கண்டி,
குடத்தனை. 077 101 6255 (C-2427)

தகவல்:
குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி



## பெரியதம்பி பூபாலசிங்கம்

எமது பெரியப்பா அவர்களின்
பிரிவுச் செய்தியை
ஏற்க மறுக்கின்றது எமது இதயம்....
பெரியப்பாவின் பிரிவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தோற்றம் 15.04.1954 மறைவு 08.03.2025

பேறாமக்கள், மருமக்கள்,
குடத்தனை (C-2428)

# கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் திட்டமிடற் கிளையில்
அபிவிருத்தி உத்தியோகத்தராக(விவசாயம்)
கடமையாற்றும் திருமதி **ஜனாதனா**
அவர்களின் பாசமிகு துணைவர்

## அமரர் பாலகிருஷ்ணன் தணிகைவேள்

(யா/நெல்லியடி மத்திய கல்லூரி உடற்பயிற்சி ஆசிரியர்)

அவர்கள் 09.03.2025 அன்று காலமாகிவிட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன்
அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 31.05.1978 மறைவு 09.03.2025

பிரிவுத்துயருடன்... பிரதேச செயலாளரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்,
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை. (C-2431)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# E-சிகரெட் வைத்திருப்போரை கைது செய்ய நடவடிக்கை

## மதுவரித் திணைக்களம் எச்சரிக்கை

(கொழும்பு)

**நாட்டில் E-சிகரெட்டுகளைப் பயன்படுத்துபவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

வேப்பிங் அல்லது E-சிகரெட்டுகள் சட்ட விரோதமானது என்று பாராளுமன்ற நிதிக் குழுவில் தெரிய வந்துள்ளது.

அதை ஒழுங்குபடுத்துவதற்கான ஒரு திட்டம் தற்போது உருவாக்கப்பட்டுள்ளதாகவும் மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், ஏப்ரல் முதலாம் திகதி முதல் சிகரெட்டுகளுக்கு விதிக்கப்படும் நிறுவன வருமான வரியை 45% ஆக அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் சிகரெட் வரி படிப்படியாகக் குறைந்து வருவதாக தெரிவித்த பொது நிதி பற்றிய குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா, சிகரெட்டுகள் மீதான வரியை அதிகரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்கான வழிமுறைகள் தொடர்பிலும் ஆலோசனை வழங்கினார். (நி-8)

### பிரபல பாடகர் அலோ பிளக் இலங்கை வருகை

(கொழும்பு)

உலகப்புகழ்பெற்ற அமெரிக்க இசைக்கலைஞர் அலோ பிளக் மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

அமெரிக்க இசைக்கலைஞர் அலோ பிளக் கட்டார் எயார் வேஸ் விமானமூடாக நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தினை வந்தடைந்துள்ளார். உலகெங்கிலும் உள்ள 22 நாடுகளில் இசைதர வரிசையில் முதலிடத்தில் உள்ள அவர் அமெரிக்காவில் கிராமி விருதுகளுக்கு பரிந்துரைக்கப்பட்டவர்களில் ஒருவராவார்.

இதன்போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் அவருக்கு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளினால் விசேட வரவேற்பளிக்கப்பட்டது. (நி-8)

### மாதம்பையில் விபத்து!

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் ஸ்தலத்தில் உயிரிழப்பு

மாதம்பை, கலஹிடியாவ பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.

சிலாபத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த முச்சக்கர வண்டி ஒன்று லொறி மற்றும் பேருந்துடன் மோதியதால் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

அதேநேரம் இந்த விபத்தில் மேலும் பலர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

32, 36 வயதுடைய இரு பெண்களும், ஒரு வயது குழந்தையுமே விபத்தில் உயிரிழந்தவர்கள் ஆவர்.

அவர்கள் மினுவாங்கொடை மற்றும் ராகமவைச் சேர்ந்தவர்கள்.

விபத்தில் முச்சக்கர வண்டி சாரதி உட்படஆறு பேர் காயமடைந்து சிலாபம் பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தலவில் புனித அன்னம்மாள் தேவாலயத்தின் வருடாந்திர திருவிழாவில் கலந்து கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது, அவர்கள் விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

விபத்து தொடர்பில் பேருந்து சாரதி மற்றும் நடத்துநர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)

## 2.2 மில்லியன் மக்கள் சிறுநீரக நோயால் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் 2.2 மில்லியன் மக்கள் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக மாளிகாவத்தை தேசிய சிறுநீரக மருத்துவமனையின் சிறப்பு மருத்துவர் அனுபமா டி சில்வா தெரிவித்துள்ளார். (நி-8)

# அடிப்படை வசதிகளின்றி இயங்கும் கல்வியியற் கல்லூரிகள்

## விசேட கவனம் செலுத்த அரசு நடவடிக்கை



(கொழும்பு)

கல்வியியற் கல்லூரிகளின் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருக்கிறது என பிரதமர் ஹரிணி அமரசூரிய கவலை தெரிவித்துள்ளார்.

நேற்று கல்வி மற்றும் உயர்க்கல்வி அமைச்சு மீதான வரவுசெலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கல்வியமைச்சர் என்ற ரீதியில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்வியியற் கல்லூரிகளின் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருக்கிறது.

யாழ்ப்பாணம் பொலநறுவை போன்ற கல்வியியற் கல்லூரிகளை பார்வையிடுவதற்குச் சென்றிருந்தேன்.

அவர்கள் சரியான வசதிகள் இல்லாமல் இருக்கிறார்கள். விடுதி வசதி, குடிதண்ணீர் வசதி எதுவுமில்லை. பாடசாலையில் திறன் வகுப்பறைகள் குறித்து கதைக்கின்றோம். ஆனால் அதில் கற்பிக்கப்போகின்ற ஆசிரியர்களுக்கு இன்னமும் கரும்பலகையே காணப்படுகிறது.

சரியான மின்சார வசதிகள், உட்கட்டமைப்பு வசதிகள் இல்லை. இது தொடர்பாக இந்த வருடம் கவனம் செலுத்த வேண்டும்.

'அண்மையில் உள்ள பாடசாலை நல்ல பாடசாலை' எனும் கருத்திட்டம் நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆனால் இன்னமும் மின்சார வசதி இல்லை, மதில்கள் இருக்கிறது, நுழைவாயில், கதவுகள் இல்லை, குறியீட்டு பலகைகள் இல்லை.

இப்படி நிறைய குறைபாடுகள் இருக்கிறது. துப்பரவு வசதிகள் இல்லாத பாடசாலைகள் நாட்டில் பல இருக்கிறது.

ஆகவே எங்களுடைய வரவு செலவு திட்டத்தில் அது தொடர்பாக விசேட கவனம் செலுத்தி பாடசாலைகளில் நிறைவு பெறாமல் இருக்க கூடிய அல்லது பகுதியளவில் நிர்வாகிக்கப்பட்டு கொண்டிருக்கக்கூடிய கட்டடங்களை, கருத்திட்டங்களை நிறைவு செய்வதற்காக நிதியை நாங்கள் ஒதுக்கி இருக்கிறோம். அதற்காக 11,000 மில்லியனை நாங்கள் ஒதுக்கி இருக்கிறோம் எனத் தெரிவித்தார். (நி-8)

# உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடத் தயார்!

## சமல் ராஜபக்ச அறிவிப்பு

(கொழும்பு)

பொதுமக்கள் விரும்பும் பட்சத்தில் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் போட்டியிட தானும் தயாராக இருப்பதாக முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ச அறிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான கலந்துரையாடல் ஒன்று தங்காலையில் மகிந்த ராஜபக்சவின் கார்ல்டன் இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்சவும் கலந்து கொண்டிருந்தார்.



அங்கு கருத்து வெளியிட்ட அவர், இங்குள்ளவர்களும் பொதுமக்களும் விரும்பினால் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நானும் போட்டியிடத் தயாராக இருக்கின்றேன். எல்லா அரசியல் கட்சிகளுக்கும் ஏறுமுகம் போன்றே இறங்குமுகமும் உண்டு.


கடந்த காலத்தில் எங்களது பொதுஜன பெரமுண கட்சி இறங்குமுகத்தை சந்தித்தமை உண்மையானதே. அதில் இருந்து மீண்டு வருவோம் என்றும் சமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## நாங்கள் நெருங்கி வந்துதான் வெற்றியைத் தவற விட்டோம்

### சாண்ட்னர்




சம்பியன்ஸ் டிராபியை இந்தியா வென்றதன் பின்னர் தோல்விக்குப் பிறகு நியூசிலாந்து கப்டன் சாண்ட்னர் பேசியதாவது. "எங்களுக்கு இது ஒரு சிறந்த தொடர். ஒரு அணியாக நாங்கள் கிரிக்கெட் ஆடிய விதத்தில் மகிழ்ச்சி. நாங்கள் ஒரு சிறந்த அணியால்தான் தோற்கடிக்கப்பட்டிருக்கிறோம்.

பவர் ப்ளேக்கு பிறகு நாங்கள் இரண்டு. மூன்று விக்கெட்டுகளை வேகமாக இழந்துவிட்டோம். அவர்கள் வைத்திருப்பது உலகத்தரமான ஸ்பின்னர்கள். அவர்கள் மிகச் சிறப்பாக செயற்பட்டார்கள்.


நாங்கள் 25 ரன்களைக் குறைவாக எடுத்து விட்டோம். பிலிப்ஸ் எப்போதுமே அவ்வளவு சிறப்பாக பீல்டிங் செய்யக்கூடியவர்தான்.

ரச்சின் பட்டிங், பௌலிங் இரண்டிலுமே சிறப்பாக செயற்பட்டிருக்கிறார். இளம் வயதிலேயே ஆட்டத்தின் போக்கை நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறார். அவருக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது.

ஒவ்வொரு போட்டியிலும் ஒவ்வொரு வீரர் எங்களுக்காக சிறப்பாக ஆடினர். நாங்கள் நெருங்கி வந்துதான் தோற்றிருக்கிறோம். இந்த அணிக்கு எவ்வளவு நன்றி சொன்னாலும் தகும். எங்களுக்கு இது ஒரு நல்ல தொடர்தான் என்றார். (6-8)

## இந்தியா வென்றது மகிழ்ச்சி

### சோயப் அக்தர் தெரிவிப்பு



பரபரப்பாக நடந்த இறுதிப் போட்டியில் நியூசிலாந்தை 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி 2013இற்குப் பிறகு மீண்டும் இந்திய அணி சம்பியன்ஸ் டிராபியை வென்றிருக்கிறது.

ரி-20 உலகக்கோப்பையை வென்ற எட்டே மாதத்தில் இந்திய அணி இந்த மாபெரும் வெற்றியைப் பெற்றிருக்கிறது. இந்தியாவின் வெற்றிக்குப் பிறகு பாகிஸ்தானைச் சேர்ந்த முன்னாள் வீரர் சோயப் அக்தர் ஒரு கேள்வியை எழுப்பியிருக்கிறார்.

அவர் வெளியிட்டிருக்கும் வீடியோவில் பேசியிருப்பதாவது. "இந்திய அணி சம்பியன்ஸ் ட்ராபியை வென்றதில் மிக்க மகிழ்ச்சி. ஆனால், அங்கு நான் ஒரு விநோதமான விடயத்தைக் கவனித்தேன். போட்டிக்குப் பிறகான பரிசளிப்பு நிகழ்வில் •பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் எந்தப் பிரதிநிதியும் அங்கே இருக்கவில்லை.


பாகிஸ்தானில் சம்பியன் ட்ராபி நடைபெற்றது. ஆனால் பாகிஸ்தானிலிருந்து எந்தப் பிரதிநிதிகளும் ஏன் இறுதிப்போட்டிக்குச் செல்லவில்லை என்பது என் புரிதலுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது.

கோப்பையை வழங்க பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தைச் சேர்ந்த யாராவதும் சென்றிருக்க வேண்டும்தானே? இது எனக்கு மிகுந்த வருத்தத்தைத் தருகிறது. உலக அரங்கில் கவனம் பெறும் இந்த நிகழ்வில் பாகிஸ்தான் சார்பில் யாராவது இருந்திருக்க வேண்டும்" என்றார்.

குறித்த பதிவு சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது. (6-8)



## ஐபிஎல் தொடரிலிருந்து விலகிய இங்கிலாந்து வீரர் ஹாரி புரூக்



இங்கிலாந்து வீரர் ஹாரி புரூக், 2025 ஐபிஎல் தொடரில் இருந்து விலகுவதாக திடீரென அறிவித்துள்ளார்.

ஐ பி எல் 2025 ஆம் ஆண்டு சீசன் எதிர்வரும் 22 ஆம் திகதி தொடங்க இருக்கிறது. இதில் விளையாடும் 10 அணிகளும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில், டெல்லி கபிடல்ஸ் அணியில் இடம்பெற்றிருந்த இங்கிலாந்து வீரர் ஹாரி புரூக், 2025 ஐபிஎல் தொடரில் இருந்து விலகுவதாகத் திடீரென அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது சமூக வலைதள பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அவரது பதிவில், "வரும் ஐபிஎல் தொடரில் இருந்து விலகுவது என்ற மிகக் கடினமான முடிவை நான் எடுத்துள்ளேன். டெல்லி கபிடல்ஸ் அணியிடம் நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்.

இது இங்கிலாந்து கிரிக்கெட்டுக்கு மிகவும் முக்கியமான நேரம். ஆகவே வரவிருக்கும் கிரிக்கெட் தொடர்களுக்குத் தயாராக விரும்புகிறேன். இதற்கு எனக்கு நேரம் தேவைபடுகிறது. என் நாட்டிற்காக விளையாடுவதுதான் எனக்கு மிக முக்கியம்" என்று பதிவிட்டுள்ளார்.

ஐபிஎல் மெகா ஏலத்தில் ஹாரி புரூக்கை ரூ.6.25 கோடிக்கு டெல்லி கேபிட்டல்ஸ் அணி விலை கொடுத்து வாங்கியது.

ஐபிஎல் தொடரின் புதிய விதிப்படி, ஏலத்தில் எடுக்கப்பட்ட ஒரு வெளிநாட்டு வீரர் காயத்தை தவிர பிற காரணங்களுக்காக ஐபிஎல் தொடரில் இருந்து வெளியேறினால் அடுத்த 2 ஐபிஎல் தொடருக்கான ஏலத்தில் பங்கேற்கத் தடை விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கும் தபால் தொழிற்சங்கங்கள்

(கொழும்பு)

**தபால் தொழிற்சங்கங்கள் எதிர்வரும் மார்ச் 18 ஆம் திகதி பணிப்புறக்கணிப்பில் ஈடு படவுள்ளன.**

தபால் திணைக்களத்தின் நீண்ட கால பிரச்சினைகளுக்கு அதிகாரிகள் தீர்வுகாணத் தவறியதையடுத்து, அனைத்து தபால் தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.

இந்தத் தகவலை தபால் மற்றும் தொலைத்தொடர்பு தொழிற்சங்கத்தின் செயலாளர் மஞ்சுளா ஜயசுந்த தெரிவித்தார்.

பதவியில் ஆட்சேர்ப்பு, நியமனம், பதவி உயர்வு, சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை முன்னிறுத்தி பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

இந்த விடயங்கள் தொடர்பில் தபால் மா அதிபருடன் கலந்துரையாடியதாகவும், அங்கிருந்து எந்தவொரு சாதகமான முடிவையும் எடுக்கத் தவறியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-8)

# 50 ஆயிரத்தைக் கடந்த மாணவர்களின் இடைவிலகல்

## சுட்டிக்காட்டிய இராதாகிருஷ்ணன் எம்.பி



(கொழும்பு)

"அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" எனும் திட்டத்திற்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும் அதனுடைய பணிகள் இன்னமும் பூர்த்தி செய்யப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தைத் தாம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதாக நேற்றைய குழுநிலை விவாதத்தின் போது இராதாகிருஷ்ணன் தெரிவித்திருந்தார்.

கல்விக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியின் அளவை தாம் வரவேற்பதாக தெரிவித்த அவர், பொருளாதார பிரச்சினை காரணமாக மாணவர்களின் பாடசாலை இடைவிலகல் அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

கல்வியமைச்சின் கணக்கெடுப்பிற்கு அமைவாக 50,345 மாணவர்கள் இடைவிலகியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் மட்டும் 2,754 பேர் இடைவிலகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-8)

# செவ்வந்தி தப்ப வாய்ப்பில்லை

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

(கொழும்பு)

பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த கணேமுல்ல சஞ்சீவ படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தின் முக்கிய சந்தேகநபராக அடையாளம் காணப்பட்டுள்ள இஷாரா செவ்வந்தி இந்தியாவுக்கு தப்பிச் செல்லவில்லை என நம்பப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

செவ்வந்தி இந்தியாவுக்குத் தப்பிச் சென்றுவிட்டதாக சமூகத்தில் பரவி வரும் வதந்திகள் குறித்து விளக்கமளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சம்பவ தினமான பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி சில மணி நேரத்திற்குள்ளே செவ்வந்தி நாட்டை விட்டு வெளியேறுவதற்கான அனைத்து வழிகளும் அடையாளம் காணப்பட்டு, பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், அவர் நாட்டை விட்டு வெளியேறுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு.

புலனாய்வுக் குழுக்கள் தங்களுக்குக் கிடைக்கும் ஒவ்வொரு தகவலையும் ஆராய்ந்து வருகின்றனர். இவ்வாறான சம்பவங்களின் போது, பல்வேறு வதந்திகளைப் பரப்பி விசாரணைகளை திசை திருப்புவதற்காக சிலர் இதுபோன்ற தகவல்களை வெளியிடுகின்றனர்.

செவ்வந்தியை கைது செய்வதற்குப் புலனாய்வுக் குழுக்கள் தீவிரமான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என குறிப்பிட்டுள்ளார். (நி-8)


# விழிநீர் அஞ்சலி



அமரர். பாலகிருஷ்ணன் தணிகைவேள்

தோற்றம் 31.05.1978 — மறைவு 09.03.2025

யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமா முதலாம் அணி மாணவரும் எமது ஆருயிர் நண்பனும் யா/நெல்லியடி மத்திய கல்லூரி உடற்கல்வி ஆசிரியருமான பா.தணிகைவேள் அவர்கள் நேற்று முன்தினம் (09.03.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறுவோர் : உடற்கல்வி டிப்ளோமா முதலாம் அணி யாழ். பல்கலைக்கழகம்

(C-2424)


# இராசிபலன்

11.03.2025
மாசி 27, செவ்வாய்க்கிழமை
துவாதசி முற்பகல் 10.26 மணிவரை

ஆயிலியம் பின்னிரவு 3.49 மணிவரை
சுபநேரம் 10.53 - 12.23 மணிவரை
இராகுகாலம் 3.23 - 4.53 மணிவரை

பிரதோச விரதம்
சந்திராஷ்டமம்-பூராடம்

வளவன்




அழகுசாதனப் பொருட்கள் வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




வங்கி சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், விடாமுயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக் கிடைக்கும், தொழில் போட்டிகள் மாறும்.




கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி சமாளிப்பீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும்,. பயணங்களால் பலனுண்டு.




பயணங்களால் பலனுண்டு, வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு, நண்பர்கள் வழியில் சுபசெய்திகள் வந்து சேரலாம்.




பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், மாற்றங்களினால் ஏற்றம் பெறுவீர்கள், விருந்தினர் வருகையால் சுப விரயங்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள்.




குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள். கௌரவமான நாள்.




செய் தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.




வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், விருந்தினர் வருகையுண்டு, பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு.




எதையும் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம்.




பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறலாம், காரிய அனுகூலமுண்டு.




குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாளுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.




நீண்ட நாட்களாகத் திட்டமிட்டிருந்த காரியம் இன்று கைகூடும், பாராட்டும் புகழும் கூடும், வழிபாட்டால் ஆனந்தம் காணும் நாள், வருமானம் பெருக வழியமைத்துக்கொள்வீர்கள்.

அறிஞனைக் கேட்காதே அனுபவசாலியைக் கேள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் பெண்களின் உரிமைகள் வலுவூட்டப்படும்

## மகளிர் விவகார அமைச்சர் நம்பிக்கை

**(யாழ்ப்பாணம்)**

**சமூக மட்டத்தில் பெண்களின் பங்களிப்பு விரிவாக்கப்பட வேண்டும் என மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல் ராஜ் தெரிவித்துள்ளார்.**

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு மற்றும் யாழ்.மாவட்ட செயலகம் ஆகியன இணைந்து நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தமது அரசாங்கமானது பெண்கள் மற்றும் சிறுவர்கள் நலன் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தி வருவதாகவும் வட மாகாண அபிவிருத்திக்கு வரவு-செலவுத் திட்டம் மூலம் கூடியளவு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும், அதேவேளை பெண்களின் உரிமை, சமத்துவம், வலுவூட்டுதல் என்பன பேணப்படும் எனவும் குறிப்பிட்டார்.

இந் நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், யாழ்.மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன், வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ.வாகீசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதன்போது பெண் சுய தொழில் முயற்சியாளர்கள் கௌரவிப்பு நிகழ்வும் பெண் விடுதலை தொடர்பாக சிறப்புரைகள், மேடை நாடகம் ஆகியன இடம்பெற்றிருந்தன. (6-8-30-33)




## 'இந்துசாதனம்' ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபையினால் சைவ சமயத்தையும் தமிழையும் வளர்ப்பதற்காக 1889 ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்டு வந்த "இந்து சாதனம்" பத்திரிகை சபையின் நன்நோக்கத்துக்கு அமைவாக காலாண்டுக்கு ஒருமுறை புதிய அம்சங்களுடன் வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து வெளிவரவுள்ளது.

பத்திரிகையில் பிரசுரம் செய்வதற்கு ஏற்புடைய ஆக்கங்களை 077 789 5716 எனும் வட்ஸ் அப் இலக்கத்திற்கு அனுப்பி வைக்குமாறு யாழ். சைவ பரிபாலன சபையின் செயலாளர் அறிவித்துள்ளார். (6-8)

## யாழில் இடம்பெற்ற பெண் உற்பத்தியாளர் விழா



(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு விழுது நிறுவனம் ஸ்கோப் திட்டத்துடன் இணைந்து நடத்திய சங்கமம்- வட கிழக்கின் பெண் உற்பத்தியாளர் விழா கடந்த வெள்ளிக்கிழமை சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் ஹவுஸ்) இடம் பெற்றது.

இதன்போது உள்ளூர் பலசரக்கு பொருட்கள், கைத்தறி ஆடைகள் மற்றும் பாரம்பரிய உணவுப் பொருட்கள் போன்றன காட்சிப்படுத்தப்பட்டு இருந்தன.

அதே வேளை கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்று இருந்தன. (6-8)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் யாழ். மாவட்ட தொழிற் பயிற்சி நிலையங்களில் தொழிற் கல்வியினை முடித்த 600 இளைஞர், யுவதிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை இடம் பெறவுள்ளது

காலை 9 மணிக்கு ராஜா கிறீம் ஹவுஸ் (சரஸ்வதி மண்டபத்தில்) இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் யாழ். மாவட்ட பிரதிப் பணிப் பாளர் கு.நிரஞ்சன் தலை மையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் கலந்து கொள்ளவுள்ளார். (6-8)

## ஹெரோயினுடன் கைதான நபர் மறியலில்

(யாழ்ப்பாணம்)

யாழில் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட இளைஞன் நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

ஆனைக்கோட்டை பகுதியில் 2 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் 28 வயது இளைஞன் மானிப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் மல்லாகம் நீதவானின் முன்னிலையில் முற்படுத்திய போது குறித்த இளைஞனை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (6-8-33)



**வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையுடன் வடமராட்சி கிழக்கு,தெற்கு,மேற்கு பிரதேச செயலகங்கள் மற்றும் பண்பாட்டு பேரவைகள் இணைந்து நடத்திய கலைஞர்கள் ஒன்று கூடல் நிகழ்வு நேற்று முன்தினம் நாகதம்பிரான் ஆலய முன்றலில் கலாசார உத்தியோகத்தர் செல்வி சுகுணா தலைமையில் இடம்பெற்றது.** (படம்-மகாலிங்கம்)

## நாகதீப விகாரையை வந்தடைந்த பாதயாத்திரை



(யாழ்ப்பாணம்)

யாழ்.நாகதீப ரஜமஹா விகாரையை வந்தடைந்த உலக சமாதானத்திற்கான மைத்திரி பாதயாத்திரையில் ஈடுபட்ட பௌத்த பிக்குகள்.

இலங்கை, தாய்லாந்து, மியான்மர் மற்றும் லாவோஸை பிரதிநிதித்துவப் படுத்தும் ஐம்பத்து இரண்டு பௌத்த பிக்குகளின் பங்கு பற்றுதலுடன், "உலக சமாதானத்திற்கான மைத்திரி பாத யாத்திரை" கடந்த மாதம் 7ஆம் திகதி அன்று திஸ்ஸஹாராம ரஜமகா விகாரையில் இருந்து ஆரம்பமாகி, கடந்த சனிக்கிழமை யாழ்.நாகதீப ரஜமஹா விகாரையை சென்றடைந்தனர். (6-8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 18 கொழும்புத்துறை வீதியில் அமைந்துள்ள 581/84 எனும் ஆதனம் பெயரானது எமது ஆதனப்பதிவேட்டில் சொந்தக்காரர் என பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் **P/02** வழக்கு இலக்கத்தில் பிரிவிடுதல் வழக்கு இறுதித் தீர்வையாக செல்வநாயகம் அந்தோனி அல்ரன் மதுரஇன்னேசியஸ் யுவக்கியாம்பிள்ளை டொமினிக்கும் இன்னும் 9பேரும் பிரிவிடுதல் உறுதி மூலம் யுவக்கியாம்பிள்ளை அருள்நாயகம் டொமினிக் இற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், கொழும்புத்துறையைச் சேர்ந்த யுவக்கியாம் பிள்ளை டொமினிக் அல்லது யுவக்கியாம்பிள்ளை அருள்நாயகம் டொமினிக் என்பவர் யாழ் நொத்தாரிசு A.மரியாம்பிள்ளை முகதாவில் 1979.03.19 ஆம் திகதி 412ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிப்படி சுண்டிக்குளி கோவிற்பற்று கொழும்புத்துறை இறையில் "அமரக்கோன் முதலியார் காட்டுத்தலைமடையும் மறுபிரிவுகளும்" என்னும் பெயருடைய விஸ்தீரணம் நிலப்பரப்பு 540 கொண்ட ஆதனத்தை குருநகர் யாழ்ப்பாணத்தைச் சோந்த சவரிமுத்து கிறிஸ்தோபரும் பெண் கெலனுக்கும் அறுதி விற்றுள்ளார்.

குறித்த ஆதனத்தை பின்னர் குருநகர் மத்தியகிழக்கு வீதியைச் சேர்ந்த திருமதி றிச்சேட் கான்ஸ்போவர் எலிசபேத் குயின் என்பவர் நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் 2004.01.15 ஆம் திகதி 2015ஆம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் சவிரிமுத்து கிறிஸ்தோபர் காலமடைந்ததன் பின்னர் ஏகவாரிசான எனக்கடைந்த பிதாவழி முதுசமும் உரித்தும் எனதாட்சியுமானது என வெளிப்படுத்தியுள்ளார்

பின்னர் குறித்த ஆதனம் றிச்சேட் கான்ஸ்போவர் அவரது அற்றோணி தத்துவக்காரர் திருமதி எலிசபேத் குயின் றிச்சேட் கான்ஸ்போவர் என்பவர் மூலம் நொத்தாரிசு ஜெயசித்திரா சிறிதரன் முகதாவில் 2014.10.27ஆம் திகதி 2213ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் சாந்தகுமார் கிறோசன் பெண் விதுஸ்ரா றெனுசியாவிற்கு நன்கொடையாக கையளித்துள்ளார்.

அதன் பின்னர் குறித்த ஆதனம் சாந்தகுமார் நிறோசன் பெண் விதுஸ்ரா றெனுசியாவும் சேர்ந்து நொத்தாரிசு தேவராசா சுபாஜினி முகதாவில் 16.09.2015ஆம் திகதி 192ஆம் இலக்கத்தில நிறைவேறிய அறுதி உறுதிப்படி விக்ரோரஸ்க்கும் இம்மனுவேல் ஜேற்றுட் அமலசீலிக்கும் அறுதி விற்றுள்ளார்கள்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாண பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கொழும்புத்துறை இறை, **'அமரக்கோன் முதலியார் காட்டுத்தலைமடையும் மறுபிரிவுகளும்'** என்று வழங்கும் **'கொழும்புத் துறைத் தெருத்தோட்டம்'** நிலப்பரப்பு முன்னூற்றி எழுபத்தி ஐந்து (நில பர.375) இது உத்தரவு பெற்ற அளவையாளர் கே.கனகசபையால் 12.03.2012 இல் 1 தொடக்கம் 10 துண்டுகளாகப் பிரிவிட்டு வரைந்த 4976/12ஆம் இலக்கத்தில் அளந்த நில அளவைப்படத்தின் படி நிலப்பரப்பு முன்னூற்றி எழுபத்தியாறு குளி பன்னிரண்டு தசம் எட்டு (நில.பர. 376 குளி 12.8) இதில் ஏற்கனவே அறுதியாக விற்கப்பட்டது போக மிகுதி நிலப்பரப்பு இருநூற்றி இருபத்திரண்டு குளி மூன்று தசம் ஒன்பது இரண்டு (நில.பர. 222 குளி 3.92) இதில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.கனகசபையால் 05.12.2014 இல் 6088A/ 14ஆம் இலக்கத்தில் அளந்த நில அளவைப்படத்தின் படி துண்டு 24 (Lot 24) என சுட்டப்பட்ட நிலப்பரப்பு ஒன்றும் (நில.பர. 01) துண்டு 39(Lot 39) என சுட்டப்பட்ட நிலப்பரப்பு ஒன்றும் (நில.பர.01) இவ்விரண்டு துண்டுகளும் ஒன்று சேர்த்து நிலப்பரப்பு இரண்டு (நில.பர 02) இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. கனகசபையால் 21.12.2014 இல் 6088A -24/14ஆம் இலக்கத்திலும் 6088A-39/14ஆம் இலக்கத்திலும் அளந்த நில அளவைப்படங்களில் முறையே துண்டு 1 (Lot 1) எனச்சுட்டப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பு இரண்டிற்கும் எல்லை

கிழக்கு - குறித்த 6088A/14ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 25 உம் துண்டு 38 எனக்காட்டப்பட்ட ஆதனங்கள்  
வடக்கு- ஆறு மீற்றர் அகலப்பாதை  
மேற்கு- ஆறு மீற்றர் அகலப்பாதை  
தெற்கு- ஆறு மீற்றர் அகலப்பாதை  
இதடங்கலும் இன்னும் இவ்வாதனத்திற்கு வடக்கேயும், மேற்கேயும், தெற்கேயும் உள்ள ஆறு மீற்றர் அகலமுள்ள பாதைகளால் பிரதான வீதிக்குப் போக்குவரத்து செய்யுமுரித்தும்.  
இவ்வாதனம் யாழ்ப்பாணம் மாநகர சபையின் எல்லைக்குள் வருவதுடன் யாழ்ப்பாண பிரதேச செயலகம் J/61 கிராம சேவையாளர் பிரிவிலும் அமைந் துள்ளது.

தற்போது இவ்வாதனத்தை விக்ரோரஸ் உம் இம்மனுவேல் ஜேற்றுட் அமலசீலி என்பவர்கள் தமது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது விக்ரோரஸ் உம் இம்மனுவேல் ஜேற்றுட் அமலசிலி என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(சி-2426)

**ஆணையாளர், யாழ்.மாநகரசபை**

# வலிகாமம் தெற்கு பிரதேசசபை-சுன்னாகம்

# ஏலவிற்பனை

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குரிய பின்வரும் பாவித்த பொருட்கள் பகிரங்க ஏலத்திற்கு விற்கப்படவுள்ளன.

**காலம் : 18.03.2025 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி**  
**இடம் : தலைமை அலுவலகம், வலி தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்**

**பொருட்கள் விபரம்**

இலத்திரனியல் பொருட்கள், வாகன பற்றிகள், உலோகப் பொருட்கள், மின்னியல் பொருட்கள், தளபாடப் பொருட்கள், பழைய மரங்கள், வாகன பழைய பொருட்கள், ரயர்கள் மற்றும் வெற்று தார் பரல்கள்

**நிபந்தனைகள்**

01. ஏலதாரராக கலந்து கொள்பவர் ரூபா 100.00 மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக செலுத்துதல் வேண்டும் மு.ப. 10.00 பின்னர் ஏலதாரர் பதிவுகள் மேற்கொள்ளப்படாது.
02. சித்தியடைந்த ஏலத்தார் ஒப்புக்கொண்ட ஏலத்தொகை முழு வதையும் செலுத்திப் பொருட்களை அன்றைய தினமே அலு வலகத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும்.
03. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் தொலைபேசி இலக்கம் 021 224 0017

**செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.**  
**11.03.2025**


(சி-2425)

# யா/பெரியபுலம் மகா வித்தியலாயம்


# தரம் - 05 மாணவர் கௌரவிப்பு 2024



திருமதி. கவிதா அரவிந்தன்



ச.பிரியங்கா 148



ஜெ.கவினாஸ் 147




கௌ.கம்சிகா 144

புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களையும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற **ஸ்ரீ. அங்கயன், ஜி.ஜீவஷன், ம.பாதுஷன், இ.மிதுசன்** ஆகிய மாணவர்களையும் வழிப்படுத்திய வகுப்பாசிரியரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C-2433)

**வாழ்த்துவோர் :**  
**ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்**

# கடை வாடகைக்கு



**கிளிநொச்சி A9 கண்டி வீதியில், பொது மருத்துவமனையில் இருந்து 400 M தூரத்தில் 45X 16 அடி நீள - அகலமுடைய இரண்டு கடைகள் (பிளாட்) சகல வசதிகளுடன் வாடகைக்குண்டு.**

தொடர்புகளுக்கு: (917)

**077 807 1049, 077 012 3145**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# மார்ச் 16 இல்

## பூமிக்கு வருகிறார் சுனிதா

### உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிட்ட நாசா



(வோஷிங்டன்)

நாசா விண்வெளி வீராங்கனையான சுனிதா வில்லியம்ஸ் 9 மாதங்களுக்குப் பின் பூமிக்குத் திரும்புகிறார்.

விண்வெளி வீரர்களான சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்போர் ஆகிய இருவரும் ஆய்வுக்காகக் கடந்த ஆண்டு ஜூன் மாதம் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்திற்கு சென்றனர்.

போயிங் ஸ்டார் லைனர் விண்கலத்தில் இருவரும் 8 நாள் பயணமாக விண்வெளி மையத்துக்கு சென்ற நிலையில் விண்கலத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இருவரும் சர்வதேச விண்வெளி மையத்திலேயே தற்போது வரை உள்ளனர்.

அவர்களது பயணம், தற்போது 9 மாதங்களை எட்டியுள்ளநிலையில் அவர்களைப் பூமிக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இருவரும் விரைவில் பூமிக்குத் திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் எதிர்வரும் மார்ச் 16ஆம் திகதி ஸ்பேஸ் எக்ஸ் டிராகன் விண்கலத்தில் பூமிக்கு அழைத்து வரப்படுவார்கள் என்று நாசா உத்தியோகபூர்வமாக தெரிவித்துள்ளது. (நி-8)

# காசா விற்பனை

# ட்ரம்பின் மைதான

# எச்சரிக்கை விடுத்த

(எடின்பரோ)

**காசாவைக் கைப்பற்றினால், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் சொத்துகள் சூறையாடப்படும் என்று பாலஸ்தீனர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

ஹமாஸ் அமைப்பினர் தங்கள் வசம் உள்ள இஸ்ரேலியப் பணயக் கைதிகள் அனைவரையும் விடுவிக்க வேண்டும் என்றும் நாங்கள் காசாவை கைப்பற்றி அதனை மத்திய கிழக்கின் சுற்றுலாத் தளமாக மாற்றுவோம் என்றும் அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கருத்து வெளியிட்டிருந்தார்.

காசாவைக் கைப்பற் விருப்பதாக ட்ரம்ப் கூறிய தையடுத்து, ட்ரம்ப்பின் பே சுக்கு பதிலடி கொடுக்கு

# அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்!

## அறிமுகப்படுத்தியது வடகொரியா

### கலகத்தில் அமெரிக்கா, தென்கொரியா

(பியாங்யாங்)


வட கொரியா தனது முதல் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலை அறிமுகப் படுத்தியுள்ளது. தற்போது கட்டுமானத்தில் உள்ள இந்த நீர்மூழ்கிக் கப்பல் நீருக்கடியில் இருந்து ஏவுகணைகளை ஏவும் திறன் கொண்டது.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன், கப்பல் கட்டும் தளங்களுக்கு நேரில் சென்று அங்குள்ள கடற்படைக் கப்பல்கள் மற்றும் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களின் கட்டுமானத் திட்டங்களை நேரில் ஆய்வு செய்த படங்களை அந்நாட்டு அரச ஊடகங்கள் வெளியிட்டுள்ளது.

அப்போது பேசிய அவர். கடற்படைச் சக்தியை வலுப்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தினார். மேலும், கடலால் சூழப்பட்ட நாட்டின் இறையாண்மைக்கு, கடற்படை சக்தி மற்றும் அணு ஆயுதங்கள் மிக முக்கியமானவை என்றும் குறிப்பிட்டார். இந்த நீர்மூழ்கிக் கப்பல் 6000 முதல் 7000 தொன் எடையுள்ளதாகவும், சுமார் 10 ஏவுகணைகளை சுமந்து செல்லும் திறன் கொண்டதாகவும் இருக்கும் என்று நிபுணர்கள் நம்புகின்றனர். இந்த செய்தி தென் கொரியா மற்றும் அமெரிக்காவுக்கு பேரிடியாக அமைந்துள்ளது.


2021 ஆம் ஆண்டு நடந்த ஒரு இராணுவ மாநாட்டின் போது அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பலைக் கட்டுவதாக கிம் ஜாங் உன் அறிவித்தார். இப்போது இந்தத் திட்டம் உறுதியான வடிவம் பெறுவதால், வட கொரியாவின் இராணுவத் திறன்களில் பெரிய மாற்றம் ஏற்படும்.

பிற நாடுகளிடம் இருந்து துண்டிக்கப்பட்ட போதும் இத்தனை நவீன தொழில்நுட்பங்களை வட கொரியா எங்கிருந்து பெறுகிறது என்ற கேள்வி எழுந்துள்ளது. அதற்கு பலர் ரஷ்யாவின் திசையை நோக்கி கை காட்டுகின்றனர். (நி-8)



# இருளில்

## கொடூர முகத்



(ஜெருசலேம்)

காசாவுக்கான மின்சார விநியோகத்தை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இஸ்ரேல் துண்டித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த உத்தரவை இஸ்ரேலின் மின்சக்தி அமைச்சர் எலிகோஹன் பிறப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...னைக்கு அல்ல!

# ...த்திற்குள் புகுந்து

# ... பாலஸ்தீனியர்கள்




ர்.
பற்ற
ரிய
பேச்
கும்

வகையில் ஸ்கொட்லாந்து நாட்டில் ட்ரம்ப்புக்கு சொந்த மான கோல்ஃப் மைதானத்துக்குள் புகுந்த பாலஸ்தீனியர்கள் சிலர், காசா விற்பனைக்கு அல்ல' என்று பெயின்டால் புல்தரையில் எழுதியுள்ளனர்.

அதுமட்டுமின்றி, மைதானத்தைச் சேதப்படுத்தி, 'காசாவைக் கைப்பற்ற நினைத்தால், ட்ரம்ப்பின் சொத்துக்கள் சூறையாடப்படும்' என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.எனினும் இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் குறித்து ஸ்கொட்லாந்து பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (நி-8)


# கனடாவின் பிரதமராக மார்க் கார்னே

(ஒட்டாவா)


கனடாவினதும் அந்த நாட்டின் லிபரல் கட்சியினதும் தலைவராவதற்கான போட்டியில் மார்க் கார்னே வெற்றிபெற்றுள்ளார்.அடுத்த சில நாட்களில் இவர் புதிய பிரதமராக பதவியேற்கவுள்ளார்.

அனைவருக்கும் வலுவான கனடாவை கட்டியெழுப்பும் ஒரே நோக்கத்துடன் நான் இரவும் பகலும் பாடுபடுவேன் என பொருளாதார நிபுணரும் முன்னாள் மத்திய வங்கி ஆளுநருமான மார்க் கார்னே தனது வெற்றி உரையில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா கனடாவை மதிக்கும் வரை அமெரிக்காவிற்கு எதிரான புதிய வரிகள் தொடரும் எனவும் மார்க் கார்னே தெரிவித்துள்ளார். (நி-8)



# ... மூழ்கியது காசா
## ...த்தைக் காட்டிய இஸ்ரேல்



...றது.

மின்சாரம் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களின் வருகையை இஸ்ரேல் துண்டித்தமை தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள ஹமாஸ் அமைப்பு இது "கேவலமான மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத அச்சுறுத்தல்" என குற்றம் சாட்டியுள்ளது.

புனித ரமழான் மாதத்தில் தொடர்ந்து வரும் உதவி பற்றாக்குறைக்கு மத்தியில், இந்த மின்துண்டிப்பானது உவர் நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் செயற்பாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் காசா மக்கள் மின்னுற்பத்தி இயந்திரங்கள், சூரியசக்தித் தகடுகள் மூலம் ஓரளவு சமாளிக்கின்றனர்.

கட்டாரின், டோஹாவில் போர் நிறுத்தம் மற்றும் கைதி பரிமாற்ற பேச்சுவார்த்தைகள் தொடரவுள்ள நிலையில், காசாவில் எஞ்சியுள்ள பணயக் கைதிகளை விடுவிக்கும்படி ஹமாஸை நெருக்குவதற்காக இஸ்ரேலின் மின்சக்தி அமைச்சர் எலிகோஹன், காசாவிற்கு மின்சாரம் வழங்குவதை உடனடியாக நிறுத்த உத்தரவிட்டுள்ளார். (நி-8)

# உக்ரைனுடன் யுத்த நிறுத்தம்
# புடின் விதித்த நிபந்தனை



(மொஸ்கோ)

உக்ரைனுடன் போர் நிறுத்தத்திற்கு நிபந்தனைகளின் அடிப்படையில் தயாராக இருப்பதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ரஷ்ய ஜனாதிபதி புடின் தெரிவிக்கையில், உக்ரைனுடன் குறுகியகால தற்காலிகப் போர் நிறுத்தத்துக்கு தயார். அதற்கான பேச்சுக்குத் தயார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்த ஒப்பந்த விதிகளில் தெளிவான புரிதல் இருக்க வேண்டும்.

அந்தப் போர் நிறுத்த ஒப்பந்தம், அமைதிக்கான இறுதித் தீர்வை நோக்கிச் செல்வதாக இருக்க வேண்டும் என்றும் புடின் நிபந்தனை விதித்துள்ளதாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர்.

"இறுதிப் போர் நிறுத்த ஒப்பந்த விதிகளில் தெளிவான புரிதல் இருப்பதுடன் அமைதிப் பணிகளில் எந்தெந்த நாடுகள் பங்கு வகிக்கும் என்பதை தெளிவுபடுத்த வேண்டும்" என்றும் புடின் நிபந்தனை விதித்துள்ளார்.

இந்த சூழ்நிலையில், அமெரிக்கா, உக்ரைன் அதிகாரிகள் மட்டத்திலான பேச்சு, மேற்கு ஆசிய நாடான சவுதி அரேபியாவில் இன்று நடக்கிறது. அப்போது புடின் தெரிவித்த போர் நிறுத்த ஒப்பந்த நிபந்தனைகள் குறித்தும் பேசப்படும் என தெரிகிறது. (நி-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்க்கதிக்குள்ளாக்கப்பட்ட வேலையில்லா பட்டதாரிகள்

## சபையில் சுட்டிக்காட்டிய சஜித்

(கொழும்பு)

வேலையில்லாப் பட்டதாரிகள் பாரதூரமாக நிர்க்கதிக்குள்ளாக்கப்பட்டுள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.



நேற்று பாராளுமன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

35,000 இற்கும் மேற்பட்டவர்கள் வேலையில்லா பட்டதாரிகளாக இருக்கிறார்கள். 20,000 பட்டதாரிகளை ஆசிரியர் தொழிலுக்கு அனுப்புகிறோம் என்று உங்களுடைய கொள்கைப் பிரகடனத்தில் நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள்.

இந்த செயற்பாடு நடைபெறுமா இல்லையா என்பது தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

கொள்கைப் பிரகடனத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தாலும் 30,000 தொடக்கம் 40,000 வரையான பட்டதாரிகளுக்கு நிலையான ஒரு வேலை வாய்ப்பை வழங்குவதற்கு வரவு செலவு திட்டத்தின் ஊடாக வழி கூறப்படவில்லை என அவர் சுட்டிக் காட்டினார். (நி-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 160 | 150 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 700 | 500 | 550 | 650 |
| தக்காளி | 160 | 100 | 100 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 250 | 200 |
| கோவா | 300 | 400 | 200 | 350 |
| கரட் | 800 | 1000 | 800 | 1000 |
| பூசணி | 160 | 150 | 80-100 | 150 |
| புடோல் | 180 | 150 | 150 | 200 |
| வாழைக்காய் | 150 | 120 | 80-120 | 160 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 200-300 | 280 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 150 | 160 |
| பாகற்காய் | 300 | 500 | 400 | 400 |
| வெண்டக்காய் | 250 | 200 | 350 | 400 |
| கருணைக் கிழங்கு | 180 | 150 | 150 | 200 |
| பயற்றங்காய் | 450 | 300 | 500 | 500 |
| லீக்ஸ் | 350 | 300 | 250 | 350 |
| பீற்றூட் | 200 | 150 | 150 | 200 |
| கறிமிளகாய் | 600 | 400 | 600 | 600 |
| முருங்கைக்காய் | -- | 1500 | 2000 | 2400 |
| போஞ்சி | 400 | 300 | 300 | 500 |
| கத்தரிதம்புள்ள | 100 | 150 | 100 | 120 |
| கீரை – 1 பிடி | 120 | 150 | 60-70 | 150 |
| தேசிக்காய் | 250 | 100 | 300-400 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 150-250 | 220-260 |
| இராசவள்ளி | 500 | 500 | 400 | 450 |
| வெங்காயப்பூ | 100 | 150 | 100 | 200 |
| முள்ளங்கி | 100 | 150 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 80 | 50 | 80 |
| ஈரப்பலா | 150 | 50 | 100 | 200 |

# இன்று ஒரு தகவல் 337

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## தவறும் தண்டனையும்

ஒரு நாள் இராமர் அரசவையில் உட்கார்ந்திருந்தார். இராமர் இராஜ்ஜியம் நடந்து கொண்டிருந்த நேரம் அது. அந்த சமயத்திலே ஒரு நாய் அரசசபைக்கு வந்தது. அதன் தலையிலே அடிபட்டு இரத்தம். அந்தக் கோலத்தில அது அங்கே வந்தது. எல்லோரும் ஆச்சரியமாக அதைப் பார்த்தார்கள். இராமரும் அந்த நாயைப் பார்த்தார்.

நீ இங்கே வந்த காரியம் என்ன? என்ன நடந்தது? எதுவாயிருந்தாலும் பயப்படாமல் சொல்லு? அப்படி என்றார்.

உடனே அந்த நாய் மெதுவாக சொல்ல ஆரம்பித்தது.

ஐயா நான் தெருவிலே போய்க் கொண்டிருந்தேன். வழியிலே ஒருத்தர் வந்தார். அவர் வேத சாஸ்திரம் எல்லாம் படித்த பெரியவர். அவர் எந்தக் காரணமும் இல்லாமல் அவர் கையில் வைத்திருந்த குச்சியாலே என் தலையிலே அடித்து விட்டார். அது தான் தலையிலே இரத்தம். இதை நீங்கள் விசாரித்து தகுந்த தீர்ப்பு வழங்க வேண்டும் என்றது அந்த நாய்.

ராமர் பார்த்தார் உடனே தன்னுடைய காவலர்களை அனுப்பினார். அந்த ஆளை எங்கே இருந்தாலும் போய் கொண்டு வாருங்கள் என்றார். காவலர்கள் போனார்கள். அந்த ஆளை கண்டுபித்தார்கள். அரண்மனைக்கு வா என்று சொல்லி கூட்டிக் கொண்டு வந்து விட்டார்கள்.

என்ன நடந்தது என்று விசாரித்தார் ராமர் அதற்கு அந்த ஆள் சொன்னார். நான் வீதி வழியாக வந்து கொண்டு இருந்தேன் குறுக்கே இந்த நாய் வந்தது. நான். அவசரமாக போய்க் கொண்டு இருந்தேன் இது எனக்கு வழிவிடாமல் குறுக்கே புகுந்து இடைஞ்சல் செய்தது எனக்கு கோபம் வந்து விட்டது. அதனாலே அடித்து விட்டேன் வேதசாஸ்திரம் படித்த நான் என் வசம் இழந்து கோபப்பட்டது பெரிய தவறு தான். அதை நான் ஒத்துக் கொள்கின்றேன் குற்றத்தை ஒப்புக் கொள்கிறேன். எனக்கு என்ன தண்டனை கொடுக்க வேண்டுமோ அதை கொடுங்கள் ஏற்றுக் கொள்கின்றேன் என்றார்.

சரி இப்ப அந்த ஆளுக்கு தண்டனை கொடுக்க வேண்டும் என்ன தண்டனை கொடுப்பது? யோசித்தார் ராமர் அதையும் அந்த நாயிடமே கேட்டார். நீயே சொல்லு என்ன தண்டனை கொடுக்கலாம் இவருக்கு என்றார்.

அதற்கு அந்த நாய் என்ன சொல்லியது தெரியுமா?

இவரை ஏதாவது ஒரு கோயிலுக்கு தர்மகர்த்தாவாக நியமித்து விடுங்கள்.அது தான் இவருக்கு சரியான தண்டனை என்றது. இதைக்கேட்டதும் ராமர் முகத்தில் புன்னகை ஆனால் அங்கு இருந்த மற்றவர்களுக்கெல்லாம் ஆச்சரியம்.

அது எப்படி தவறு செய்தவர்களுக்கு தண்டனை கொடுப்பது தானே நியாயம். அதை விட்டுவிட்டு தர்மகர்த்தா பதவியைக் கொடுக்க சொல்லுதே இந்த நாய். என்ன ஆச்சரியம். இந்த சந்தேகத்தை அந்த நாயிடம் கேட்டார்கள் அங்கே இருந்தவர்கள். இதற்கு அந்த நாய் பதில் சொல்லியது.

நான் வந்து முற்பிறவியில் ஒரு கோயிலுக்கு தர்மகர்த்தாவாக இருந்தேன். எவ்வளவு கவனமாக எச்சரிக்கையாக தான் என்னுடைய கடமைகளை செய்து கொண்டு வந்தேன் . அப்படி இருந்தாலும் சில சமயங்களில் என்னையும் மீறி கோயில் செல்வதை நான் அனுபவிப்பதற்கு காரணமாகிவிட்டேன். ஒரு கோயிலுக்கு தர்மகர்த்தாவாக நியமிக்கும் படி கேட்டுக் கொண்டேன். இதில் இருந்து என்ன தெரிகிறது. எந்த பதவியில் நாம் இருந்தாலும் நமக்கு தெரியாமல் கூட அதை தவறாக உபயோகப்படுத்த கூடாது என்பதை இதில் இருந்து புரிந்து கொள்ள வேண்டும். இல்லை என்றால் அடுத்த பிறவியில் நாயாகப் பிறந்து எங்கேயாவது போய் வாலை ஆட்டிக் கொண்டு நிற்க வேண்டியது தான்.

கோயில் வாசலிலே இரண்டு நாய் பேசிக் கொண்டு இருந்தது. போன ஜென்மத்தில் நான் மனிதனாகத் தான் இருந்தேன். ஒரு கோயில் பூசாரி பேச்சைக் கேட்டு அவருடன் கூட்டு சேர்ந்தேன். அவர் கடவுளின் நகைகளை எல்லாம் அபகரித்து என்னிடம் கொடுத்தார்.

நான் எடுத்துக் கொண்டு வந்து விட்டேன். திருடியது அந்த ஆள் தான் எடுத்து கொண்டு வந்தது தான் நான். இருந்தாலும் நான் மட்டும் நாயாகப் பிறந்து விட்டேன். இப்ப மட்டும் அந்த பூசாரி என்னிடம் மாட்டினால் கடித்து குதறிவிடுவேன் என்றது.

அவசரப்பட்டு அப்படி செய்து விடாதே பதிலுக்கு அவரும் உன்னை திருப்பி கடித்தாலும் கடித்து விடுவார். ஏனென்றால் அவரும் இப்ப ஒரு நாயாக தான் இருக்கிறார் என்றது இன்னொன்று. அது எப்படி உனக்கு தெரியும் என்றது அது . நான் தானே அது என்றது இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிர்கள் தொடர்பில் இலவச தகவல்களுக்கு குறுஞ்செய்தி இலக்கம்

(கொழும்பு)

பயிர்கள் தொடர்பான இலவச தகவல்களைப் பெற எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறு விவசாயத் திணைக்களம் அறிவித்துள்ளது.

விவசாயத் திணைக்களத்தின் 1920 விவசாய ஆலோசனை சேவையினால் செயற்படுத்தப்படும் விவசாய SMS சேவை மூலம் இந்த தகவல்களை பெறலாம்.

இதன் மூலம் 10 பயிர் வகைகளுக்குத் தேவையான தகவல்களை குறுஞ்செய்தி மூலம் உங்கள் கைபேசியில் பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு 1920 தொலைபேசி எண்ணை அழைத்து அல்லது KSMS இடைவெளி உங்கள் பெயர் குறிப்பிட்டு பயிர் எண்ணைக் குறிப்பிட்டு 1920 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி அனுப்புமாறு விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி நெல் பயிருக்கு எண் 1 உம், மிளகாய் பயிருக்கு எண் 2 உம், சோளப் பயிருக்கு எண் 3 உம், பெரிய வெங்காயப் பயிருக்கு எண் 4 உம், உருளைக்கிழங்கிற்கு எண் 5 உம், புடலங்காய் பயிருக்கு எண் 6 உம், கத்தரிக்காய் பயிருக்கு எண் 7 உம் இட முடியும் என்பதுடன் தக்காளி பயிருக்கு எண் 8 உம், பப்பாளி பயிருக்கு எண் 9 உம், வாழைப் பயிருக்கு எண் 10 உம் இட்டு பயிருக்கேற்ற ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(6-8)

# பாவனைக்கு ஒவ்வாத எண்ணெய் தாங்கிகள் மீட்பு




(கொழும்பு)

மனித பாவனைக்கு ஒவ்வாத தேங்காய் எண்ணெயை ஏற்றிச் சென்ற இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலன்னறுவை- லக்ஷ உயனயில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த மனித பாவனைக்கு ஒவ்வாத தேங்காய் எண்ணெய் சுத்திகரிக்கப்பட்டு சந்தைக்கு அனுப்பப்பட்ட மோசடி தொடர்பில் அரலங்வில அதிரடிப்படையினரால் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது மின்னேரியா பகுதியில் விசேட அதிரடிப்படையினர் குழு ஒன்று பாரவூர்திகளை நிறுத்திச் சோதனையிட்டனர்.

இச் சோதனையின் போது 33 எண்ணெய் தாங்கிகள் சிறப்பு அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட பாரவூர்தி சாரதியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, குறித்த தொழிற்சாலையில் மேலும் சில எண்ணெய் தாங்கிகள் இருப்பது உறுதிசெய்யப்பட்டது.

அவற்றில் 68 எண்ணெய் தாங்கிகளில் 12,240 லீற்றர் எண்ணெய் இருந்ததாக பொலிஸார் குறிப்பிட்டுள்ள னர்.

மேலதிக விசாரணைகளை பொலன்னறுவை பொதுச் சுகாதார அலுவலகம் முன்னெடுத்துள்ளது. (6-8)



கிளிநொச்சி மாவட்ட கிரிக்கெட் அணிகள் மோதும் வெற்றிக் கிண்ணத்தின் அறிமுக விழா நேற்று முன்தினம் கிளிநொச்சி மகாவித்தியாலய பழைய மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டது.
(படம்- தேவானந்தன்)

யா/கோண்டாவில் இராமகிருஷ்ணன் மகாவித்தியாலயத்தில் Cub Scout Silver star work shop-2025 நேற்று முன்தினம் பாடசாலை மைதானத்தில் அதிபர் கு.திலீபன் தலைமையில் இடம் பெற்றது.



# தேர்தலில் வாக்களிக்கும் மக்களின் வகிபங்கை அதிகரிக்க விழிப்புணர்வு

(யாழ்ப்பாணம்)

தேர்தல் செலவீனங்களை முன்னிறுத்திய தேர்தல் பிரசாரங்கள் அதன் மதிப்பீடு செய்யப்பட்ட செலவீனங்கள் மற்றும் கண்காணிப்பு தொடர்பிலான மாவட்ட மட்ட தேர்தலுடன் தொடர்புடையவர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழில் நடைபெற்றது.



அரியாலை சர்வோதய மண்டபத்தில் நடைபெற்ற குறித்த கலந்துரையாடலில் யாழ் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர், யாழ் மாவட்ட பொலிஸ் அதிகாரிகள், அரசியல் கட்சிகள் சார் பிரதிநிதிகள், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டு தத்தமது கருத்துக்களை முன்வைத்திருந்தனர். தேர்தல் வன்முறைகளை கண் காணிப்பதற்கான நிலையமானது கடந்த 28 வருடங்களாக இலங்கையில் தனது செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றது.

எமக்கு நாட்டிலுள்ள கட்சிகள் அனைத்தும் சமனானதே. தேர்தல் போட்டியில் சமனிலை பேணப்படுவதை உறுதி செய்வதை வலியுறுத்தவே நாம் எமது கண்காணிப்புப் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

அதுமட்டுமல்லாது தேர்தலில் வாக்களிக்கும் மக்களின் வகிபாகம் அதிகரிப்பதை உறுதி செய்யவும் அதற்கான விழிப்புணர்வுகளை ஒவ்வொரு மக்களுக்கும் சென்றடையும் வகையில் முன்னெடுத்தும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-8-33)

# உள்ளூர் உற்பத்திகளும் விற்பனைச் சந்தையும்





(நெளுக்குளம்)

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்குடன் உள்ளூர் உற்பத்தியாளர்களுக் கான விற்பனைச் சந்தை ஒன்று நேற்று முன்தினம் புதுக் குடியிருப்புப் பிரதேசசபை பஸ் தரிப்பு நிலையத்தில் இடம் பெற்றது.

தற்கால பொருளாதார நெருக்கடி காலத்தில் உள்ளூர் உற்பத்திகளை அதிகரிப்பதற்கும், உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கோடும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப்பிரிவு, மகளிர் விவகார அமைச்சு, தொழிற்துறைத் திணைக்களம், புதுக் குடியிருப்பு பிரதேச செயலகம், புதுக்குடியிருப்பு பிரதேசசபை ஆகியவற்றின் அனுசரணையுடன் குறித்த விற்பனைச் சந்தை இடம்பெற்றது.

இவ் உள்ளூர் உற்பத்திச் சந்தையானது பிரதி ஞாயிற்றுக்கிழமைகள்தோறும் இடம் பெறவுள்ளது. (6-8-[illegible])


## பொதுமக்கள் கருத்தறிதல்

வருடாந்தம் நடைபெறும் நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா தொடர்பாக மாநகரசபையால் வழமை போன்று முன்னெடுக்கப்படும் போக்குவரத்து ஒழுங்குகள், பாதுகாப்பு ஏற்பாடுகள், சுகாதார மருத்துவச் செயற்பாடுகள், உள்நுழைவு அனுமதி வழங்கல் ஆகிய விடயங்கள் தொடர்பாக தீர்மானம் மேற்கொள்வதற்கு நல்லூர்ஆலயச் சூழலில் வீதித் தடைப் பகுதிக்குள் வசிக்கும் நிரந்தர குடியிருப்பாளர்கள், வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் இக் கலந்துரையாடலில் பங்குபற்றி தமது கருத்தக்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இடம் : சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை கேட்போர் கூடம்,
யாழ். மாநகர சபை
காலம் : 2025.03.16 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பி.ப3.00 மணி

(சி-2430)

மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 721





இதை நிச்சயமாய் அவர்களுக்குச் சொல்லி விடு!" என்று பொன்னியின் செல்வன் கூறியபோது அவனுடைய பார்வை ஒரு கணம், மண்டபத்தின் தூணுக்குப் பின்னால் நின்றிருந்த வானதியின் பால் சென்றது. மறு கணம் அவன் திரும்பியபோது, அவனுக்கெதிரே இருந்த படித்துறை நந்தி விக்கிரகத்தைப் பார்த்தான்.

"அக்கா! ஒரு செய்தி! இலங்கை சிறிய இராஜ்யமாயிருந்தாலும் அந்த இராஜ்யத்தை முற்காலத்தில் ஆண்ட மன்னர்கள் மகாபுருஷர்கள் பெரிய உள்ளங்களைப் படைத்தவர்கள். அவர்கள் பெரிய பெரிய திட்டங்களைப் போட்டுப் பெரிய பெரிய காரியங்களைச் சாதித்தார்கள்.

செங்கற்களைக் கொண்டு மலை போன்ற மேக மண்டலத்தை அளாவிய புத்த ஸ்தூபங்களை நிர்மாணித்தார்கள். ஆயிரம் இரண்டாயிரம் அறைகள் உள்ள புத்த விஹாரங்களைக் கட்டினார்கள். பத்தாயிரம் தூண்கள் உள்ள மண்டபங்களை எழுப்பினார்கள்.

புத்த பகவான் எவ்வளவு பெரியவர் என்பதைப் பார்த்தவுடன் தெரிந்து கொள்ளும் படியாக, அதோ அந்தத் தென்னை மர உயரமுள்ள புத்தர் சிலைகளை அமைத்தார்கள். அக்கா! இதோ நமக்கு முன்னாலிருக்கும் நந்தி விக்கிரகத்தைப் பார்! எவ்வளவு சின்னஞ்சிறியதாயிருக்கிறது! அடியும் முடியும் காண முடியாத மகாதேவரின் வாகனமாகிய நந்தி இவ்வளவு சிறியதாகவா இருக்கும்? கைலாசத்தில் பரமசிவனுடைய பரிவாரங்களோ பூதகணங்கள். அந்தப் பூதகணங்கள் அடிக்கடி வந்து தொந்தரவு செய்யாமல் கைலாசத்தின் வாசலில் நின்று காவல் புரிகிறவர் நந்திதேவர். அவர் இவ்வளவு சிறிய உருவத்துடன் இருந்தால் பூத கணங்களை எப்படித் தடுத்து நிறுத்த முடியும்? அதோ பார் அக்கா! என் கண் முன்னால் இதோ இந்த நந்தி வளர்கிறது. வளர்ந்து, வளர்ந்து, பெரிதாகிறது.

பிரம்மாண்ட வடிவம் பெற்று இம்மண்டபத்தின் மேற்கூரையை முட்டுகிறது. மேற்கூரை இப்போது போய் விட்டது. நந்தி பகவான் வான மளாவி நிற்கிறார் பூத கணகங்கள் வருகிறார்கள்! நந்தி பகவானைப் பார்த்துப் பய பக்தியுடன் நின்று சிவனைத் தரிசிக்க அனுமதி கேட்கிறார்கள் நந்தி பகவான் அவ்வளவு பெரியவராயிருந்தால் சிவபெருமான் வீற்றிருக்கும் ஆலயம் எப்படியிருக்க வேண்டும்? தக்ஷிண மேரு என்று சொல்லும்படி வானை அளாவிய கோபுரம் அமைக்க வேண்டாமா? அதற்குத் தக்கபடி பிரகாரங்கள் இருக்க வேண்டாமா? இப்போது சோழ நாட்டில் உள்ள கோயில்கள் அகஸ்திய முனிவர் கோயில் கொள்வதற்குத் தான் ஏற்றவை.

சிவபெருமானுக்கு உகந்தவை அல்ல. எனக்கு இராஜ்யமும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம். சோழ சிம்மாசனத்தில் யார் அமர்ந்தாலும் ஆலயத் திருப்பணி அதிகாரியாக என்னை நியமிக்கும்படி கேட்டுக்கொள்வேன்"

"தம்பி! நம் இரண்டு பேரில் பைத்தியம் யாருக்கு அதிகம் என்று போட்டி போட வேண்டியது தான். தற்சமயம் இந்தச் சோழ நாட்டைப் பேரபாயம் சூழ்ந்திருக்கிறது. உட்பகைவர்களாலும் வெளிப் பகைவர்களாலும், சிநேகிதர்கள் போல் நடிக்கும் பகைவர்களாலும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. சில காலமாக நான் அடிக்கடி ஒரு பயங்கரமான கனவு காண்கிறேன்.

மின்னலென ஒளிவீசும் கூரிய கொலைவாள் ஒன்று என் அகக்கண் முன்னால் தோன்றுகிறது. அது யார் மேலேயோ விழப்போகிறது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## தன்னலமற்ற சேவை



முன்னொரு காலத்தில் வேங்கைபுரி என்ற நாட்டை வேந்தன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவர் தமது நாட்டில் இறைவனுக்காக மிகப் பெரிய ஆலயம் ஒன்றை அமைக்க எண்ணினார்.

இதுவரை எவருமே கட்டியிராதவாறு மிக அழகிய கோயில் கட்டுவதன் மூலம் தமது புகழ் பல்லாண்டு காலம் புகழுடன் விளங்கும் என்பது அவருடைய விருப்பம்.

இதற்காக நாடெங்கிலுமிருந்து கை தேர்ந்த சிற்பிகளை வரவழைத்தார். கோயில் கட்டுவதற்கான கற்களையும் பாறைகளையும் கொண்டு வரச் செய்தார்.

சிற்பிகள் வேலையைத் தொடங்கினர். கல்லுளிகளின் ஓசை கேட்கலாயிற்று. கோயில் வேலை துரிதமாக நடைபெற்று வந்தது. மன்னன் நாள் தோறும் கோயில் வேலையை வந்து பார்வையிடுவார். நாளுக்கு நாள் கோயில் கட்டும் வேலை வளர்ச்சி பெறுவது கண்டு உள்ளம் பூரிப்படைந்தான்.

பல நாட்களுக்குப் பின்னர் ஒரு வழியா கக் கோயில் கட்டி முடிந்தது. அழகிய கோபுரமும் கோபுரத்தில் உள்ள சிற்பங்களும் பார்ப்பவர் உள்ளத்தைப் பரவசமடையச் செய்யும்படியாக விளங்கின. மன்னன் இதனைக் கண்டு பூரிப்படைந்தான். கோயில் பணி பூர்த்தியானதும் மிகப் பெரிய சலவைக்கல் ஒன்றில் கோயிலைக் கட்டிய தனது பெயரைப் பொன்னால் பொறிக்கச் சொன்னான். அதனைக் கோபுர வாசற்படியில் எல்லோர் கண்களிலும் படும்படியாகப் பதித்து வைக்கச் சொன்னான்.

அன்று இரவு அரசன் தூங்கிக் கொண்டிருக்கும் போது ஒரு கனவு கண்டான். கனவில் இறைவன் தோன்றினார். மன்னன் கட்டிய கோயிலும் தோன்றியது. அதில் மன்னன் பெயர் பொறிக்கப் பெற்ற சலவைக் கல்லும் இருந்தது.

இறைவன் நேரே மன்னன் பெயர் பொறிக்கப்பட்டிருந்த சலவைக் கல்லின் அருகே சென்றார். மன்னன் பெயரை அழித்து விட்டு வேறு யாரோ ஒரு பெண்மணியின் பெயரை எழுதி விட்டுச் சென்றார்.

மன்னன் திடுக்கிட்டுக் கண் விழித்தான். நேரே கோயிலுக்குச் சென்றான். சலவைக் கல்லைப் பார்த்தான். அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

ஆம், அவன் பெயர் அழிக்கப்பட்டு யாரோ ஊர் பேர் தெரியாத ஒரு பெண்மணியின் பெயர் அதில் பொறிக்கப்பட்டிருந்தது. இதைக் கண்ட அரசனுக்கு ஒருபுறம் அவமானமாகவும் மறுபுறம் வேதனையாகவும் இருந்தது. "இவ்வளவு பாடுபட்டுப் பெரும் பொருள் செலவு செய்து இந்தக் கோயிலைக் கட்டினேன்.

முடிவில் என்னுடைய பெயர் பொறிக்கப்படாமல் வேறு யாரோ ஒரு பெண்மணியின் பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறதே!' என்று வேதனையடைந்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்ந்த அமைதி மற்றும் அன்பு இவ்விரண்டுமே உண்மையான உலகச் சேவைக்கான சக்திகளை உற்பத்தி செய்கின்றன. – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மதமாற்றம் செய்வதை முழுமையாகத் தவிருங்கள்

தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்பதற்குப் பொருள் உரைத்த தமிழகத்தைச் சேர்ந்த ஒரு கத்தோலிக்கர்; தென்னாட்டில் சிவன் என்று போற்றப்படும் கடவுள் எல்லா நாட்டு மக்களாலும் இறைவன் எனப் போற்றப்படுகிறார் எனக் கூறியிருந்தார்.

அவரின் பொருள் உரைப்பு நம்மை வெகுவாக ஈர்த்திருந்தது.

ஆக, நாம் எச்சமயத்தவர்களாக இருந்தாலும் எல்லாச் சமயங்களையும் மதிக்கின்ற மனப்க்குவத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

இதைவிடுத்து என்னுடைய சமயமே உயர்வானது என்று கூறுகின்றவர்கள் யாரேனும் இருப்பார்களாயின், அவர்கள் பாவப்பட்டவர்கள் என்றே கூறவேண்டும்.

ஆம், ஒன்றே குலம்; ஒருவனே தேவன். இதுவே மெய்மையானது.

இத்தகு உண்மைத்தத்துவத்தைத் தந்த நம் தமிழினம் ஒருபோதும் சமய பேதம் பார்த்ததில்லை.

அவ்வாறு சமய பேதம் பார்க்காத காரணத்தாலேயே மேற்குலகத்துச் சமயங்கள் தென்கிழக்காசிய நாடுகளில் இடம்பிடித்தன.

ஆம், தமிழ் மக்களிடம் இருக்கக்கூடிய சமய நல்லிணக்கத்தை தமக்குச் சாதகமாக்குவதற்கு முற்பட்ட மதமாற்றச் சபைகள், தமிழ் மக்களை மதம் மாற்றுவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

எம் மக்களிடம் இருக்கக்கூடிய ஏழ்மையையும் போர் தந்த வடுக்களையும் மையப்படுத்தி மதமாற்ற சபைகள், வீடுகள் தோறும் தங்கள் மதமாற்றக் கூலிகளை அனுப்பி தீவிர மதமாற்றப் பிரசாரம் செய்கின்றன.

ஏழ்மையாலும் இழப்புகளாலும் துன்பப்பட்ட மக்களுக்கு மதமாற்றிகள் மூளைச்சலவை செய்கின்றனர்.

கூடவே சைவ சமயத்தை நிந்தை செய்கின்றனர்.

சைவ சமயக் கடவுளை சாத்தான் என்கின்றனர். சாத்தான்களுக்குப் படைத்தவற்றை உண்ணக்கூடாது எனக் கூறிப் பகைமை வளர்க்கின்றனர்.

அவர்களின் அதிதீவிர பிரசாரம் மதமாற்றத்தை மட்டுமன்றி, சைவ சமயத்தைக் கடுமையாக எதிர்க்கின்ற அளவுக்கு மதம் மாறியவர்களுக்கு வெறி ஊட்டுகின்றனர்.

இவ்வாறு மதம் மாற்றிகள் சைவ சமயத்தவர்களின் படலைகளைத் தட்டும்போது, அவர்கள் நயத்தக்க நாகரிகம் கருதி வந்தவர்களின் போதனைகளைச் செவிமடுக்கின்றனர்.

எனினும் சைவ மக்களின் அந்த நல்ல எண்ணத்தை மதமாற்றிகள் பயன்படுத்தி தமக்கும் தம் சந்ததிக்கும் ஈனத்தைத் தேடிக் கொள்கின்றனர்.

உண்மை. கூலிக்காக ஒரு சமயத்தைக் குறைகூறுவது, அந்த சமயத்தின் கடவுளைச் சாத்தான் எனக் கூறுவதென்பது மிகக் கொடியவர்களால் மட்டுமே ஆகக் கூடியது.

எனவே மதமாற்றம் என்பதை முற்றுமுழுதாகக் தவிர்க்க வேண்டும். மதம் மாற்றுகின்றவர்களை துரத்த வேண்டும்.

இத்தகைய மதவாதிகள்; தமிழ் இனத்தை மதத்தால் பிரித்து தமிழினத்தின் மகிமையை அழிக்கின்றனர்.

இவர்களை மன்னியாதிருப்பதே சமய நல்லிணக்கத்துக்கு நாம் செய்கின்ற பேருதவியாகும்.

## தகுதி, திறமை அடிப்படையில் துணைவேந்தர்களை நியமியுங்கள்

### அரசியல் வேண்டாம் – சபையில் சஜித்

(கொழும்பு)—— தகுதி மற்றும் திறமையின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை நியமிக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நேற்றுப் பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ருஹுணு, ரஜரட்ட, தென்கிழக்கு மற்றும் கிழக்கு உள்ளிட்ட பல பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் நியமனத்தில் அரசாங்கம் அரசியல் விளையாடுகின்றது. இது ஒரு தவறான முன்னுதாரணமாகும்.

அமைப்பை மாற்ற வந்த தேசிய மக்கள் சக்தி அரசு, அதே பழைய பாதையில் தொடர்கிறது.

அத்துடன் ருஹுணு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சமந்த குமாரவின் நியமனத்தில், அதிக மதிப்பெண் பெற்றவருக்குப் பதிலாக இரண்டாவது அதிக மதிப்பெண் பெற்றவரை நியமிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் குற்றம் சாட்டினார்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு கூட பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழுவைப் பாதிக்க முடியாது என்றும் இந்த நிலையை மாற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வவுனியாவில் கட்டுப்பணம் செலுத்தியது

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் வவுனியா மாநகர சபை உள்ளிட்ட நான்கு சபைகளிலும் போட்டியிட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்று வவுனியா மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை கட்டுப்பணம் செலுத்த முடியும்.

அதற்கமைவாக வவுனியா மாவட்டத்தின் வவுனியா மாநகரசபை, வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை, வவுனியா வடக்குப் பிரதேச சபை, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை ஆகிய நான்கு உள்ளூராட்சி மன்றங்களிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அதன் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் தனித்துப் போட்டியிடவுள்ளது. அதற்கான கட்டுப்பணத்தை கட்சியின் மாவட்டக் கிளையினர் செலுத்தியிருந்தனர். (ம-7,250)

## தட்டுப்பாடின்றி மருந்துகளை விநியோகிக்க நடவடிக்கை

### சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)—— அரச வைத்தியசாலைகளுக்கு எவ்வித தட்டுப்பாடுமின்றி மருந்துகளைத் தொடர்ச்சியாக வழங்கவுள்ளதாக சுகாதார மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் மருந்து விநியோகம் தொடர்பில் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், சுகாதார மற்றும் மருந்து விநியோகம் என்பன இந்நாட்டு மக்களின் வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்புடைய துறைகளாகவுள்ளன. ஆகையால் அவற்றுக்கு மாற்று வழிகள் எதுவும் இல்லை. இத்துறைகளில் கடமையாற்றுபவர்களின் பொறுப்புணர்வு, ஒருங்கிணைப்பு மற்றும் மேலாண்மை ஆகியவை அத்துறைகளில் நேரடித்தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. சுகாதாரம் மற்றும் மருந்துத் துறைகளில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு செயற்பாடு தொடர்பிலும் தொடர்ச்சியாகக் கண்காணிப்பதுடன் அதன் விளைவுகள் தொடர்பில் ஆராய்வதும் அவசியமானதாகும் என்றார். (ம-7)

## கொடிகாமம் மடத்தடி வீதியை முழுமையாகப் புனரமைக்குமாறு ஆளுநரிடம் மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)—— கொடிகாமம் மடத்தடி வீதியை முழுமையாகப் புனரமைக்குமாறு ஆளுநரிடம் அவ்வூர் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொடிகாமம் மடத்தடி வீதியானது 40 ஆண்டுகளுக்கு மேலாக புனரமைக்கப்படாமல் காணப்பட்டது. இது தொடர்பில் ஆளுநரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து இரண்டு கிலோமீற்றர் கொண்ட இவ்வீதியானது தற்போது 155 மீற்றர் வரை புனரமைக்கப்பட்டுள்ளது.

இவ்வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுத்த அதிகாரிகளுக்கு நன்றியைத் தெரிவித்த அவ் ஊர் மக்கள் புனரமைக்கப்படாமல் இருக்கும் வீதியின் ஏனைய பகுதியையும் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவ்வீதியை அன்றாடம் கூலி வேலை செய்வோர், பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், அரச ஊழியர்கள் என பலதரப்பட்ட மக்கள் பயன்படுத்துகின்றனர்.

யாழ். மாவட்டத்திற்குக் கிடைக்கும் நிதியில் முன்னுரிமை அடிப்டையில் கொடிகாமம் மடத்தடி வீதியை முழுமையாகப் புனரமைத்துத்தருமாறு உரிய அதிகாரிகளுக்கு அவ்வூர் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-7)

## ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

### மன்னாரில் நான்கு சபைகளுக்கு கட்டுப்பணம் செலுத்தியது

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிட ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்றுத் திங்கட்கிழமை மன்னார் மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணத்தைச் செலுத்தியது.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை, நானாட்டான் பிரதேச சபை, முசலி பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய [illegible] மன்றங்களுக்கான கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளது.

மன்னார் பிரதேச சபை தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை இடம்பெற்று வருகின்றமையினால் மன்னார்ப் பிரதேச சபைக்கான தேர்தல் குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

இந்த நிலையிலே ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மன்னார்மாவட்டத்தில்நான்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் போதைப்பொருளுடன் கனேடியப் பெண் கைது

17.5 மில்லியன் ரூபாய் பெறுமதியான போதைப்பொருளைக்கடத்த முயற்சித்த குற்றச்சாட்டில் 20வயதுடைய கனேடியப் பெண் ஒருவர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு (9) சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

சோதனையில் சுங்க அதிகாரிகள் அவரது பொதிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 17 கிலோகிராம் 573 கிராம் போதைப்பொருளைக் கண்டுபிடித்தனர்.

சந்தேக நபர், கைப்பற்றப்பட்டபோதைப்பொருட்களுடன் மேலதிக விசாரணைக்காக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உள்ள பொலிஸ்போதைப்பொருள் தடுப்புப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம-7)

# தெங்கு உற்பத்தியாளர்களுக்கு நிவாரணம் வழங்க தீர்மானம்

(கொழும்பு)

**தேங்காய் விலை அதிகரிப்பு, தேங்காய் உற்பத்தி வீழ்ச்சி உள்ளிட்ட பிரச்சினைகளைக் கவனத்திற் கொண்டு தெங்கு உற்பத்தி விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை தீர்மானித்துள்ளது.**

விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் தேவையான தென்னங் கன்றுகளை வழங்குதல், குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்குதல், வீட்டுத்தோட்ட விவசாயிகளுக்கு இலவச தென்னங் கன்றுகளை வழங்குதல் போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்த தென்னைப் பயிர்ச்செய்கை சபை திட்டமிடப்பட்டுள்ளது. (நி-8)

# கைவிடப்பட்ட நிலையில் குழந்தை மீட்பு

(கொழும்பு)

அம்பலாங்கொடை மாதம்பே தேவகொட பிரதேசத்தில் வீதியில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த குழந்தை ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

2 மாத ஆண் குழந்தை ஒன்றே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தேவகொட பிரதேசத்தில் வீதியில் கைவிடப்பட்ட நிலையில் குழந்தை ஒன்று இருப்பதாக அம்பலாங்கொடை பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் குழந்தையை மீட்டு, உடனடியாகப் பலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

மேலும், குழந்தை நலமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் அம்பலாங்கொடை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 20<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L, வியாபாரம் (own)<br>எதிர்பார்ப்பு : தகுதியான பெண்<br>தொ.இ: B/15196 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: College, Teacher<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: G/14222 |
| பிறப்பு:1988 இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம்<br>கி.பா: 62<br>7 இல் செவ்<br>உயரம்:5'10"<br>தகைமை/தொழில்: A/L , TO<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: B/15198 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 25<br>உயரம்: 5'4<br>தகைமை/தொழில்: Political science, MA<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் பட்டதாரி<br>தொ.இ: G/14212 |
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 37 1/4<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: BSc, Software Engineer (pvt)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15200 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு (கனடா)<br>தொ.இ: G/14215 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3310

விநுஸ்கா




யது




மாதங்கி




நந்துசன்




அஸ்விந்




ருது




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுழிபுரத்தில்...

தில் இருந்து லொறியில் 3 மாடுகளைக் கடத்திச் செல்ல முற்பட்ட வேளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார். (ம-7)

## பொலிஸ்...

களை முடிப்பதாகக் கூறி பணம் பெற்று வந்தமை தொடர்பில் யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினருக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வந்த நிலையில் குறித்த பொலிஸ் அதிகாரியின் மகன் தலைமறைவாகி உள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் யாழ் நீதவான் நீதிமன்றில் பொலிஸார் வழக்கு தாக்கல் செய்த நிலையில் சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்துமாறு மன்று பொலிஸாருக்குக் கட்டளையிட்டுள்ளது.

அதேவேளை சந்தேகநபரின் தந்தையான பொலிஸ் அதிகாரி முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்கு இடமாற்றப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மன்னார்...

24 ஆம் திகதி முதல் மார்ச் 27 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நேற்றுத் திங்கட்கிழமை முதல் மார்ச் 26ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை கட்டுப்பணம் செலுத்தலாம் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-7)

## விசாரணை...

ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

வடக்கிலும் தெற்கிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கான பொறிமுறை வலுப்படுத்தப்படும். இது விடயத்தில் விசாரணை நடத்தி, நீதியைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணை சிறப்பாக நடைபெற்று வருகின்றது. வெளியில் தெரியாவிட்டாலும் உள்ளே விடயங்கள் காத்திரமாக நடைபெறுகின்றன.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி, தாஜுடீன் கொலை, லலித், குகன் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதனால் விசாரணைகள் தொடர்பில் குழப்பமடைய வேண்டாம்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இரு வருடங்களுக்கு முன்னர் இலங்கை தொடர்பில் தீர்மானமொன்று முன்வைக்கப்பட்டது. மனித உரிமை பாதுகாக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. எனவே மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தையும் மாற்றுவதற்கும் தீர்மானித்துள்ளோம். நீதி, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சு என மூன்று அமைச்சுகளையும் உள்ளடக்கிய வகையில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது என்றார். (ம-7)

## அத்துமீறிய...

வர்களுக்கு உதவி செய்வதாகப் புலம்பெயர் தமிழர்களிடம் நிதியினைப் பெற்று, அதன் ஊடாக உதவி செய்வது போன்ற காணொளிகளை தனது யூரியூப் தளத்தில் பதிவேற்றி வந்துள்ளார்.

இவ்வாறான பின்னணியில் அவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வரும் பாடசாலை மாணவியொருவரின் வீட்டுக்கு இரவு வேளை சென்ற குறித்த நபர், பாடசாலை மாணவியை காணொளி எடுக்க முற்பட்டுள்ளார். அதற்கு மாணவி மறுப்புத் தெரிவிக்கவே, காணொளியில் நாகரிகமற்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளார்.

குறித்த காணொளி சமூகவலைத் தளங்களில் பரவியதை அடுத்து பல்வேறு தரப்பினரும் தமது கண்டனங்களைத் தெரிவித்து, இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இவ்வாறு உதவி செய்பவர்களின் நிதி கையாடுகைகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் கோரி வந்தனர்.

இந்நிலையில் பண்டத்தரிப்பில் அந்த வீட்டுக்கு சமரசம் பேச மீண்டும் சென்ற வேளை ஊர் இளைஞர்கள் அவர்களை மடக்கிப் பிடித்து இளவாலை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதனைத் தொடர்ந்து அவர்களைத் தடுத்து வைத்து விசாரித்த பொலிஸார் அவர்களைக் கைது செய்து அவர்களுக்கு எதிராக பொலிஸாரால் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். குறித்த வழக்கை விசாரித்த நீதவான் அவர்களை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (ம-7,33)

## தம்புள்ளையில்...

வாகனமொன்று அருகிலிருந்த மரமொன்றின் மீது மோதியதாலேயே குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மீண்டும் ஓர் இலட்சாதிபதி NLB
08.03.2025 சீட்டிழுக்கப்பட்ட அதிஷ்டத்தின் அடையாளம்
தேசிய லொத்தர் சபையின்
NLB ராசி என அழைக்கப்படும் ஹந்தஹன
டிக்கட்டின் ஊடாக ஜக்போட் பரிசு தொகையான
ரூபா 4 402 614.40/-
எமது விற்பனையில் இரண்டாவது ஜக்போட் ஆக
வெல்லப்பட்டுள்ளது என்பதனை மகிழ்வுடன்
அறியத்தருகின்றோம்,
இரத்தினசபாபதி பிரசாந்தன்
(N220006)
யாழ் நகர் விற்பனை முகவர்.
(C-2433)

மஹஜன சம்பத
திகதி 2025.03.10
சீட்டிழுப்பு இலக்கம் 5771
Y 6 5 7 8 4 3
அத சம்பத
Y 7 8 4 3
சீட்டிழுப்பு இலக்கம் 0346

தன நிதானய
திகதி - 2025.03.10
சீட்டிழுப்பு இலக்கம் - 1801
G 19 38 49 55 G
93005

மெகா பவர்
திகதி 10/03/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2119
Y 01 30 64 75 76

ஜய
திகதி 2025.03.10
சீட்டிழுப்பு இலக்கம் 039
K 7 1 0 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4013
சீட்டிழுப்பு திகதி 10.03.2025
U 30 39 63 72
U

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.03.10
சீட்டிழுப்பு 1080
மகரம் 06 14 40 42 மகரம்
93706 10

உத்தியோகபூர்வ முடிவுகள்
10.03.2025 வெற்றி வாரம் 479
M 7 2 0 0 6 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.33,237,578.40
76125

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2745
சீட்டிழுப்பு திகதி 2025.03.10 தினம் திங்கட்கிழமை
27 39 51 56 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 91,337,708.80

சனிதா
திகதி 10.03.2025 வெற்றி வாரம் 4906
09 21 59 67 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,364,647.20
65995

ஜயோதா
திகதி 2025.03.10 வெற்றி வாரம் 2110
06 11 14 64 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 28,283,073.20

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4457
சீட்டிழுப்பு திகதி 10.03.2025 தினம் திங்கட்கிழமை
07 43 45 55 விருச்சிகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00
142908

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 17 09 18 44 69
1921
10.03.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.568,025,590.40

ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 2571
சீட்டிழுப்பு திகதி: 2025.03.10
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.78,560,936.80
29 40 51 55 Q
396505

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேன் முறையீட்டு...

ரசராக இன்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் உறுதியுரை எடுத்து பதவியேற்கிறார்.

யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் நீதவான், மாவட்ட நீதிபதி மற்றும் மேல் நீதிமன்ற நீதிபதியாக அன்னலிங்கம் பிரேமசங்கர் சுமார் 28 ஆண்டுகள் நீதிச் சேவையில் கடமையாற்றியுள்ளார்.

சுமார் 14 ஆண்டுகள் நீதவான் மற்றும் மாவட்ட நீதிமன்ற நீதிபதியாக பதவி வகித்த அன்னலிங்கம் பிரேமசங்கர் 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி திருகோணமலை மேல் நீதிமன்ற ஆணையாளராக (மேல் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை பாராளுமன்றினால் அதிகரிக்க முன்னர்) பின்னர் 2013 ஆம் ஆண்டு ஜுலை 01ஆம் திகதி தொடக்கம் 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற ஆணையாளராக பதவி வகித்ததுடன் 2014ஆம் ஆண்டு பெப்ரவரி 11ஆம் திகதி முதல் மேல் நீதிமன்ற நீதிபதியாக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டு யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு என மேல் நீதிமன்ற நீதிபதியாகவும் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாகவும் சுமார் 13 ஆண்டுகள் பதவிவகித்துள்ளார். (ம-7)

## புதிய கல்வி...

குழுக் கூட்டத்தில் பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். அதன்படி, புதிய கல்விச் சீர்திருத்தங்கள் ஐந்து முக்கிய தூண்களின் கீழ் செயல்படுத்தப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய பாடத்திட்டத்தை அறிமுகப் படுத்துதல், மனித வளங்களை மேம் படுத்துதல், உட்கட்டமைப்பை மேம் படுத்துதல், பொதுமக்களுக்குக் கல்வி கற்பித்தல் மற்றும் சரியான மதிப்பீடு ஆகிய முக்கிய தூண்களின் கீழ் இந்த புதிய கல்விச் சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகப் பிரதமர் ஹரிணி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் முதல் மற்றும் ஆறாம் வகுப்புகளில் உள்ள மாணவர்களுக்கு 2026 ஆம் ஆண்டில் முதல் முறையாக இந்தச் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்த ஏற்கனவே ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## மகா சங்க...

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

வீழ்ச்சியடைந்த சமூகத்தை மீண்டும் கட்டியெழுப்புவதிலும் ஒழுக்கமான நாட்டைக் கட்டியெழுப்புவதிலும் மகா சங்கத்தினர் தலைமையிலான மதஸ்தலங்களுக்கு மிகப்பெரிய மற்றும் அசைக்க முடியாத பொறுப்பு உள்ளது. பொருளாதார மற்றும் அரசியல் சாதனைகள் எவ்வளவு எட்டப்பட்டாலும் நல்ல சமூகம் உருவாக்கப்படாவிட்டால் அவை எதுவும் பயனளிக்காது என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

நாட்டின் வீழ்ச்சியடைந்துள்ள சமூகக் கட்டமைப்பை சட்டத்தின் மூலம் மட்டும் சீர்படுத்த முடியாது என்றும் நாட்டில் கருணையுள்ள சமூகம் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, புத்தபெருமான் உட்பட அனைத்து மத குருமார்களும் உபதேசித்த மீட்சியின் சாராம்சம் குறித்த வலுவான கருத்தாடல் நாட்டிற்கு உடனடியாகத் தேவை என்றும் குறிப்பிட்டார். (ம-7)

## கனடாவில்...

மார்க்கம் பகுதியில் வசித்து வந்த 20 வயதான பெண் ஒருவரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த துடன் வீட்டில் வளர்க்கப்பட்ட நாயொன்றும் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் படுகாயம் அடைந்த 26 வயதான ஆண் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குழுவொன்றினால் திட்டமிட்ட வகையில் வீட்டின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக யோர்க் பிராந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

# இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ். தொகுதிக் கிளைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணத் தொகுதிக் கிளையின் கூட்டம் நேற்று பிற்பகல் யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சியின் தலைமைச் செயலகத்தில்இடம்பெற்றது.

இதன்போது யாழ்ப்பாண மாநகர சபை வேட்பாளர்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

கலந்துரையாடலில் இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சொலமன் சிறில், யாழ்ப்பாண மாநகர சபையின் முன்னாள் முதல்வர் இமானுவேல் ஆனல்ட், யாழ்.மாநகர சபை வேட்பாளர்கள் கலந்துகொண்டிருந்தனர். (ம-7,33)

# முகமாலையில் வீதி விபத்து

பளை - முகமாலை A9 வீதியில் நேற்று விபத்துச் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

யாழில் இருந்து கிளிநொச்சி நோக்கி சென்ற இரண்டு மகேந்திரா வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

முன்னால் பயணித்த வாகனம் சமிக்ஞை இன்றி மாற்று வீதிக்கு திரும்ப முற்பட்ட வேளை, பின்னால் வந்த இன்னொரு வாகனம் மோதி விபத்து சம்பவம் நிகழ்ந்துள்ளது.

சம்பவத்தில் வாகனம் பலத்த சேதங்களுக்கு உள்ளான போதும் சாரதிகளுக்கு எந்தவித காயங்களும் ஏற்படவில்லையென தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)


கனடாவில் PR வாய்ப்புக்கள்
CARE GIVER கற்கைநெறி
HOME SUPPORT WORKER & HOME CHILD CARE PROVIDER
கனடாவில் 50,000 க்கு மேற்பட்ட வேலை வாய்ப்புக்கள்
G.C.E O/L
6 மாதங்கள்
50,000/-
NVQ/UK DIPLOMA சான்றிதழ்கள் வழங்கப்படும் (C-2436)
CIMS 49A, CHAPPEL LANE JAFFNA 0777068777

UK BUSINESS VISITOR VISA
லண்டனில் இடம்பெறும் LONDON TAMIL MARKET வர்த்தக கண்காட்சியில்..
விசா விண்ணப்பங்கள் / STALL BOOKING / HOTEL BOOKING / RETURN AIR TICKET / பயண ஒழுங்குகள்
தொடர்புகளுக்கு
V2 TRAVELS 0777068777

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2435) 076 825 7716 (ஆகாஸ்)

காணி விற்பனைக்கு
நீர்வேலிச் சந்தியில் அருமையான சூழலில் 7 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
074 38 25 961
076 91 97 566
077 46 87 645

வாடகைக்கு தேவை
யாழ். மாநகர சபை எல்லைக்குள் காரியாலய தேவைக்கு இடம் வாடகைக்கு தேவை.
தொடர்புகளுக்கு : 077 612 6089 (C-2432)


## 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 11.02.2025 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

### அமரர் மதியாபரணம் மங்களநாயகி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் மண்டைதீவு தலைக்கீரி புனித தீர்த்தக்கரையில் இன்று 11.03.2025 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெறும். வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை மறுதினம் 13.03.2025 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

6 ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

குடும்பத்தினர்


Institute of Medical Sciences
Green Memorial Hospital, Manipay
வேலைவாய்ப்பு
சமையல் உதவியாளர்
25 வயதிற்கு மேற்பட்ட அனுபவம் வாய்ந்த சமையல் உதவியாளர் தேவை
சம்பளம் நேர்காணலின் போது தீர்மானிக்கப்படும்
தொடர்புகளுக்கு:- 0760477106 / 0212256990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.